www.penakural.com

மலர்: 03 இதழ்: 09 ஜூலை 2025 Vol.: 03 Issue: 09 July 2025 ₹ 20/-

# பேனா குரல்

# PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்



## உரிமை மீட்க தலைமுறை காக்க

### அன்புமணியின் நடை பயணம்


# Subzero Cool Tech

## AC REPAIR SERVICE & RENT

**AT YOUR DOOR STEP**

- AC REPAIR
- INSTALLATION
- MAINTENANCE
- AMC SERVICE

**We Repair all Brands**




CONTACT US

Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.

SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

பேனா குரல்
PENA KURAL தமிழ் மாத இதழ்
RNI No.: TNTAM/2022/85375
ஆண்டு: 03 இதழ்: 09 ஜூலை 2025
விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : நா வீ சிவசங்கர்
ஆசிரியர் : ராதிகா.S, B.E.,
சிறப்பு ஆசிரியர் : M. ஸ்ரீராம்
கௌரவ ஆசிரியர் : K. ராமசுப்ரமணியன்
இணை ஆசிரியர் : K. ரமேஷ்குமார்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, ந.மதிவாணன், P.கார்த்திகேயன், S.மோகன்

தலைமை நிருபர்கள்:
R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், B.நவின்குமார், H.காஞ்சன், சங்கரன்

நிருபர்கள்:
Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி, தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ், K.மாரிதுரை

புகைப்பட நிருபர்கள்: V.கவியரசன், கபில்
ஓவியம் & புகைப்பட நிருபர்: V.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்கள்:
M. குணசீலன், B.Com.,M.L., Government of India, Central Government Additional Standing Counsel
G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
Tamilni Printz & Graphics - 8754582123

நிர்வாக அலுவலகம்:
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 8754582123
info@penakural.com
news@penakural.com
www.penakural.com



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, மற்றும் விளம்பரங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *




# சுற்றுச்சூழலை ஆபத்துக்குள்ளாக்கும் மின்னணுக் கழிவுகள்

இந்தியாவில் மின்னணுக் கழிவுகள் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. மாநிலங்களவையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி, 2019-ஆம் ஆண்டு 10.01 லட்சம் மெட்ரிக் டன் இருந்த மின்னணுக் கழிவுகள், 2023-24-ல் 17.50 லட்சம் மெட்ரிக் டனாக உயர்ந்துள்ளன. மின்னணுப் பொருட்களின் பயன்பாடு வேகமாக வளர்ந்ததால், அவற்றை சரியாக மறுசுழற்சி செய்வது அரசுக்கு ஒரு கடின சவாலாக உள்ளது.

பழுதடைந்த மின்னணு சாதனங்கள் பெரும்பாலும் கழிவுகளாக தூக்கி எறியப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட சில கழிவுகள் மட்டும் மறுசுழற்சிக்கு அனுப்பப்பட்டாலும், நாட்டில் 9.90 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு இன்னும் மறுசுழற்சி செய்யப்படாமல் குவிந்துள்ளன. இவற்றில் இருக்கும் காட்மியம், காரீயம், பாதரசம் போன்ற நச்சுப் பொருள்கள் மண்ணில் கலந்து நில வளத்தையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கின்றன.

உலகின் மிக அதிக மின்னணுக் கழிவுகளை வெளியேற்றும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. மக்கள் தொகையும், அவர்களின் மின்னணு சாதனப் பயன்பாடும் இதற்கு முக்கிய காரணம். பயன்படுத்தப்பட்ட குளிர்சாதனங்கள், டிவிகள் போன்றவை பெரும்பாலும் முறையான மறுசுழற்சி இல்லாமல் நெடுஞ் சாலை ஓரங்களிலும் காலி நிலங்களிலும் கொட்டப்படுகின்றன. உள்ளாட்சி நிர்வாகங்கள் சேகரித்தாலும், போதுமான மறுசுழற்சி வசதிகள் இல்லாததால் தனியார் நிறுவனங்களை நாட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால், மின்னணுக் கழிவு மறுசுழற்சி ஒரு புதிய தொழில்துறையாக உருவெடுத்து வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது. குறிப்பாக, மின்கலன்களில் இருந்து பெறப்படும் லித்தியம் அடுத்த பத்து ஆண்டுகளில் ரூ.700 கோடி மதிப்பிலான சந்தை வாய்ப்பை தரும் என நிபுணர்கள் கணிக்கின்றனர். முறையான மறுசுழற்சி நடைமுறைகள் சூழல் பாதிப்பையும் குறைக்க உதவும்.

வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் வணிகத் துறைகளிலிருந்தே அதிக அளவில் மின்னணுக் கழிவுகள் உருவாகின்றன. கடந்த ஆண்டில் வெளியேற்றப்பட்ட கழிவுகளில் சுமார் 70% வீட்டு நுகர்வோர் சாதனங்களே. தெற்கு தில்லியின் சீலாம்பூர் சந்தை, நாட்டிலேயே மிகப்பெரிய மின்னணுக் கழிவு மையமாகும். இங்கு ஆயிரக்கணக்கானோர் பழைய கணினிகள், மொபைல்கள், பிரிண்டர்கள், குளிர்சாதனங்கள் போன்றவற்றிலிருந்து உலோகங்களை பிரித்து மறுசுழற்சிக்காக அனுப்புகின்றனர். வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் மின்னணுக் கழிவுகளும் இங்கு சிகிச்சையளிக்கப்படுகின்றன.

மேலும், வீட்டுக்குள் குவிந்து கிடக்கும் பழைய மின்னணு சாதனங்களை வெளியேற்றுவதின் பாதிப்புகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். வருங்காலத்தில் மின்னணுப் பொருட்களின் பயன்பாடு தவிர்க்க முடியாததாக இருக்கும் நிலையில், அவற்றின் கழிவுகளைச் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாமல் மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது மிக அவசியமான ஒன்றாகும். எனவே, திடக் கழிவு மேலாண்மையுடன் இணைத்து, மின்னணுக் கழிவு மேலாண்மையையும் மாநகராட்சி, உள்ளாட்சி நிர்வாகங்கள் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும்.

– ஆசிரியர்








தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் சமூகநீதிக்கு எதிரான, மக்களை வாட்டி வதைக்கக் கூடிய, மக்களின் துயரங்களைத் துடைக்காமல் விளம்பர மோகத்தில் மகிழ்ச்சியடையும் திமுக அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனும், இந்திய அரசியலமைப்பு சட்டத்தால் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் 1. சமூக நீதிக்கான உரிமை, 2. வன்முறையில்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை, 3. வேலைக்கான உரிமை, 4. விவசாயம் மற்றும் உணவுக்கான உரிமை, 5. வளர்ச்சிக்கான உரிமை,

6. நல்லாட்சி மற்றும் அடிப்படை சேவைகளுக்கான உரிமை, 7. கல்வி, நலவாழ்வுக்கான உரிமை, 8. மது-போதைப் பொருள்களால் பாதிக்கப்படாமல் இருக்கும் உரிமை, 9. நீடித்திருக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கான உரிமை, 10. ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான உரிமை ஆகிய 10 வகையான அடிப்படை உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்குடனும் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் ஜூலை 25-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை தொடங்கி தமிழ்நாடு நாளான நவம்பர் 1-ஆம் தேதி வரை தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணம் என்ற தலைப்பில் நடைபயணம் மேற்கொள்கிறார்.

இந்த நிலையில் திருப்போரூர் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு நடைபயணத்தை தொடங்கினார் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ். திருப்போரூரில் தொடங்கும் இந்த பயணம் தருமபுரியில் நிறைவடைய உள்ளது.

# காவல்துறையினர் - சட்டம் ஒழுங்கை பேணிப் பாதுகாத்து, நீதியை நிலைநாட்ட வேண்டும்:

## முதலமைச்சர் முக ஸ்டாலின்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்களுடன் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்து ஆய்வு செய்ததோடு, காணொலிக் காட்சி வாயிலாக மத்திய, மேற்கு மற்றும் தெற்கு மண்டல காவல்துறை தலைவர்களுடனும் ஆய்வு மேற்கொண்டார்,

அப்போது, முதலமைச்சர் காவல் துறை மண்டல வாரியாக ஆய்வு மேற்கொண்டு, குற்றங்கள் குறித்தும், அவைகள் மீது எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்ததோடு, நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்குகள் குறித்தும் கேட்டறிந்தார்.

காணொலி ஆய்வில் கலந்து கொண்ட மண்டல காவல்துறை தலைவர்கள் தங்கள் மண்டலங்களில் குற்றத்தடுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள் குறித்து விளக்கி கூறினார்கள்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு, பொது அமைதியை மிக கவனமாக கையாண்டு வருவதையும், இவ்வரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, தொழில் முதலீடு, புதிய தொழிற்சாலைகள், புதிய வேலைவாய்ப்புகள் போன்றவை அதிகரித்துள்ளதையும் குறிப்பிட்டு, அத்துடன் அனைத்து தரப்பு மக்களும் அமைதியாக வாழ்கின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது என்றால் அதற்கு காவல்துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாய் விளங்குகின்றது என்று குறிப்பிட்டார்.

மேலும், காவல் நிலையங்களுக்குப் புகார் கொடுக்க வருகின்ற அனைத்து பொதுமக்களிடமும் கண்ணியத்தோடு நடந்து கொண்டு, அவர்களது புகார்கள் மீது குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய நடவடிக்கைள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும், கஞ்சா, கள்ளச்சாராய வழக்குகளில் கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத்தர தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், போதைப் பொருள் நடமாட்டத்தை



கட்டுப்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

சட்டம் ஒழுங்கு தொடர்பான முக்கியப் பிரச்சினைகள் ஏற்படும்போது தொடர்புடைய காவல்துறை உயர் அலுவலர்கள் உடனடியாக ஊடகங்களை சந்தித்து அந்த பிரச்சினை குறித்து தெளிவாக விளக்கம் அளித்து, வதந்திகள் பரவுவதை தடுத்திடவும், காவல்துறையின் மீதான நம்பிக்கையை நிலைநிறுத்தவும் அது உதவும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சாதி மற்றும் சமய பூசல்களில் ஈடுபடுவர்கள், வதந்தி மற்றும் வெறுப்புணர்வை பரப்பி பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் ஆகியோர் மீது பதிவு செய்யப்படும் வழக்குகளில் கூடுதல் கவனம் செலுத்திட அறிவுறுத்தினார்.

பொது இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்துவது, குற்றத்தடுப்பு நடவடிக்கைகளில், சமுதாயத்தின் பங்களிப்பை ஊக்குவிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றச்செயல்கள் நடக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், காவல் துறையினர் முழுமையாக செயல்பட சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள நிலையில். காவல்துறையினர் சட்டம் ஒழுங்கை பேணிப் பாதுகாத்து, நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# போக்சோவில் 350 ஆசிரியர்கள் கைதா?

## வேலூர் கருத்தரங்கில் இயக்குனர் கண்ணப்பன் அதிர்ச்சித் தகவல்

தமிழக அரசின் பள்ளி கல்வித்துறை இயக்குனரான ச.கண்ணப்பன் பள்ளிக்கூடங்களில் கல்வித்தரம் சிறக்கவும், அடிப்படை வசதிகளை பெருக்கவும் ஆசிரியர்களின் பணி சிறக்கவும், மாணவர்களின் கற்றல் திறன் மேம்பாடு அடையவும் சீரிய பணிகளை ஆற்றி வருகிறார். பொதுவாக தலைமை பொறுப்பில் உள்ள அதிகாரிகள் தலைமை அலுவலகம் இருக்கும் சென்னை-யிலேயே தங்கள் அலுவலகத்தில் அமர்ந்துதான் பணிகளை கவனிப்பார்கள். ஆனால் கண்ணப்பனை பொறுத்தமட்டில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஆங்காங்கே உள்ள பள்ளிக்கூடங்களுக்கும் சென்று ஆசிரியர்களின் கற்பித்தல் திறனையும், மாணவர்களின் கற்றல் ஆற்றலையும் நேரில் பார்த்து தேவையான அறிவுரைகளை வழங்கி வருகிறார். அந்த வகையில், சில நாட்களுக்கு முன்பு வேலூரில் ஒரு கருத்தரங்கில் அவர் பேசும்போது அதிர்ச்சி மற்றும் கவலை தரத்தக்க தகவலை கூறினார்.

மாணவிகளை ஆசிரியர்கள் குழந்தைகளாக பார்க்கவேண்டும். தமிழகம் முழுவதும் இதுவரை 350 ஆசிரியர்கள் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். போக்சோ சட்டம் என்றால் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டமாகும். இதில் குழந்தைகள் என்றால் 18 வயதுக்குட்பட்ட ஆண், பெண் குழந்தைகளை குறிக்கும். இந்த வயது வரம்பில் உள்ள குழந்தைகள் மீது பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்கொடுமையை இழைப்பவர்கள் மீது இந்த சட்டம் பாயும். இந்த 350 ஆசிரியர்களில் 50 பேர் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துவிட்டு மாணவர்களுக்கு சரியான முறையில் பாடங்களை கற்றுத்தரவேண்டும். பள்ளியை மாணவர்களுக்கு பிடித்த இடமாக மாற்றவேண்டும். பள்ளிகளில் நன்னெறிகளை கற்றுத்தர வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக திகழவேண்டும் என்றும் பேசினார்.



'ஆசிரியர் பணியே அறப்பணி அதற்கு உன்னை அர்ப்பணி' என்பது முதுமொழியாகும். இதுபோல 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்றும் தமிழில் ஒரு பழமொழி உண்டு. ஆக அறப்பணி செய்யும் ஆசிரியர்கள் தெய்வத்துக்கு இணையாக போற்றப்படுகிறார்கள். ஒரு நல்ல ஆசிரியர் ஒரு மாணவனை சிறந்த அறிவாளியாக

> **ஆசிரியர் பணியே அறப்பணி அதற்கு உன்னை அர்ப்பணி என்பது முதுமொழியாகும், மேலும் அறப்பணி செய்யும் ஆசிரியர்கள் தெய்வத்துக்கு இணையாக போற்றப்படுகிறார்கள், ஒரு நல்ல ஆசிரியர் ஒரு மாணவனை சிறந்த அறிவாளியாக மட்டுமல்லாமல், ஒழுக்கமுள்ள மனிதராகவும் மாற்றமுடியும்.**

மட்டுமல்லாமல், ஒழுக்கமுள்ள மனிதராகவும் மாற்றமுடியும். ஒருபக்கம் கல்வியை கற்றுக்கொடுக்கும் ஆசிரியர், மறுபக்கம் அந்த சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு நன்னெறியை போதித்து அவர்கள் மனதில் ஒளியையும் ஏற்றி அவர்களை நல்வழிப்பாதையில் அழைத்து செல்லும் ஆற்றலுடையவர் களுமாவார்கள். ஆசிரியர் பற்றி மகாகவி பாரதியார் கூறும்போது, ஆசிரியன் என் அழகிய நண்பன். அறிவை தருவான், தந்தை செய் பண்பினன் என்று ஆசிரியர் பணியின் தூய்மையை மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

அத்தகைய பண்புகொண்ட ஆசிரியர்களை சமுதாயம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும்போது, எதுவும் அறியாத சின்னஞ்சிறு மலர்களை ஆசிரியர் என்ற போர்வையில் உள்ள சில காமுகர்கள் கசக்கி எறியும் சம்பவங்கள் பற்றிய செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வருவது மிகவும் வேதனையளிக்கிறது. அந்த காலங்களில் பெண் குழந்தைகள் பருவ வயதை அடைந்ததும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பமாட்டார்கள். ஆனால் இப்போது பெண் குழந்தைகளும் படிக்க வேண்டும், உயர் கல்விக்கு செல்லவேண்டும். உயர்ந்த பதவிகளை வகிக்கவேண்டும் என்ற ஆசை அந்த பெண் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், அவர்களை பெற்றவர்களுக்கும், ஏன் சமுதாயத்துக்கும் இருக்கிறது. அந்த உயரிய எண்ணங்களை இதுபோன்ற கருப்பு ஆடுகள் சிதைத்து விடக்கூடாது. மாணவர்களை போல, ஆசிரியர்களுக்கும் நன்னெறிகளை தலைமை ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் அவ்வப்போது வழங்கவேண்டும். இத்தகைய தவறு செய்யும் ஆசிரியர்களை பணியில் இருந்து உடனடியாக நீக்கவேண்டும்.






# PROPSERV
Property Related Allied & Legal services

- ★ REGISTRATION
- ★ PATTA
- ★ GIRAMA NATHAM
- ★ CMDA APPROVAL
- ★ BUILDING PLAN
- ★ NAME TRANSFER
- ★ SETTLEMENT
- ★ LEGAL HEIR CERTIFICATE
- ★ CORPORATION TAXES
- ★ LAND CEILING
- ★ SLUM BOARD
- ★ HOUSING BOARD
- ★ PROPERTY IDENTIFICATION
- ★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com

# எடப்பாடி பழனிச்சாமிதான் முதல்வர் வேட்பாளர்;

# பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் உறுதி



வரவிருக்கும் 2026 மாநில சட்டமன்றத் தேர்தலில் அதிமுக-பாஜக கூட்டணிக்கு எடப்பாடி பழனிச்சாமி முதல்வர் வேட்பாளராக இருப்பார் என்று பாஜக தமிழ்நாடு தலைவர் நயினார் நாகேந்திரன் உறுதியாகக் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா சமீபத்தில் அளித்த நேர்காணல் ஒன்றில், எடப்பாடி பழனிச்சாமியை முதல்வர் வேட்பாளராக நேரடியாகக் குறிப்பிடுவதைத் தவிர்த்ததால், விவாதங்கள் எழுந்தது.

இந்நிலையில், இந்த விவாதங்கள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய நயினார் நாகேந்திரன், "முதல்வர் வேட்பாளர் குறித்து எந்த குழப்பமும் இல்லை. அமித்ஷா ஏற்கனவே எடப்பாடி பழனிசாமியின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் அதிமுக தலைமையில் போட்டியிடப்பட உள்ளதால், அவரே முதல்வர் வேட்பாளராக இருப்பார்." எனக் கூறினார்.

அமித்ஷா ஒரு நாளிதழுக்கு அளித்த பேட்டியில், அதிமுகவில் உள்ள பிளவுபட்ட பிரிவுகளை சமரசம் செய்ய எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும், அதிமுக கட்சி தனது உள் விவகாரங்களை சுயமாக தீர்க்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

மேலும், தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்றும், அதில் பாஜகவுக்கு குறிப்பிடத்தக்க பங்கு இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதற்கிடையே, மேலும் கேள்விகளுக்கு பதிலளித்த நயினார் நாகேந்திரன், அமித்ஷா மற்றும் எடப்பாடி பழனிச்சாமி இடையேயான பரஸ்பர முடிவுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் கூட்டணி அரசு அமைக்கப்படும் என்றும் கூறினார்.

தமிழக வெற்றிக் கழகம் கூட்டணியில் சேருமா என்ற கேள்விக்கு நல்லதே நடக்கும் என நயினார் நாகேந்திரன் மேலும் கூறினார்.

# கீழடியில் விரைவில் கல்வி சுற்றுலா!

## அன்பில் மகேஷ் பொய்யாமொழி




கல்வி சுற்றுலாவாக கீழடி போன்ற தொல்லியல் அகழாய்வு இடங்களுக்கு அரசுப் பள்ளி மாணவர்களை அழைத்துச் செல்வதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணவர்களின் கலைத்திறனை வெளிக்கொண்டு வரும் விதமாக 'கலைச் சிற்பி மாநில அளவிலான பயிலரங்கம்' நிகழ்ச்சி, சென்னை செம்மஞ்சேரியில் நடைபெற்றது. இதில் ஓவியம், சிற்பம், பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், நாடகம், பொம்மலாட்டம் கலைக்கான பயிற்சி அளிக்கப்பட்டு, அதில் சிறந்த முறையில் செயல்பட்ட மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

அதில் கலந்து கொண்ட பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பயிலரங்கத்தில் பங்கேற்ற மாணவர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "மாணவர்கள் பெறும் மதிப்பெண் மட்டுமல்ல, திறமை தான் அவர்களை தனித்துவமாக்கும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுவார். 3 வருடங்களுக்கு முன்பு இந்த திட்டம் தொடங்கப்பட்ட போது, 34 லட்சம் பேர் கலந்து கொண்டனர். தற்போது 60 லட்சம் பேர் கலைச்சிற்பி திட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

இங்கு மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் கலை பயிற்சி அளிக்கப்படுகிறது. பரதம், நாடகம், ஓவியம், இசை பயிற்சி கடந்த 16ஆம் தேதியிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது. திறமையை வளர்க்க வாய்ப்பும், திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கலாச்சாரத்தின் மூலமாக பண்பாட்டை வளர்க்கும் திட்டமாக இத்திட்டம் உள்ளது. அந்த வகையில், மாணவர்கள் அனைவரும் கலைஞர்களாக மாறியுள்ளனர்.

நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கும் மாணவர்கள் மட்டுமல்ல, ஜஸ்ட் பாஸ் வாங்கும் மாணவர்களுக்கும் ஊக்கம் அளிப்பது தான் எங்கள் நோக்கம். படிப்போடு சேர்ந்து மாணவர்களின் திறமையை வளர்ப்பதும் அவசியம். பெற்றோர்கள் நமது பிள்ளைகளை மற்ற பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க கூடாது.

அரசுப் பள்ளி மாணவ மாணவியர்களை கல்விச் சுற்றுலாவாக கீழடிக்கு அழைத்துச் செல்வதற்கான முயற்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். நமது மாநிலத்தின் அகழாய்வு தளங்களை இளம் மாணவர்கள் நேரில் பார்ப்பதற்கும், நமது பண்பாட்டைத் தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் தொல்லியல் தளங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான திட்டத்தை விரைவில் முன்னெடுக்க உள்ளோம்," எனத் தெரி-வித்தார்.

# எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம்



'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்கிறார். அவர் இந்த பயணத்தை மேட்டுப்பாளையத்தில் 7-ந் தேதி தொடங்குகிறார்.

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சட்டமன்ற தொகுதி வாரியாக தேர்தல் சுற்றுப் பயணத்தை தொடங்குகிறார். முதல் கட்டமாக அவரது பயணம் தொடர்பான அறிவிப்பை அண்ணா தி.மு.க. தலைமை கழகம் வெளியிட்டு உள்ளது. அதன் விவரம் வருமாறு:-

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் `மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற உன்னத நோக்கத்துடன் `புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயணம்' என்ற பெயரில் முதல் கட்டமாக 7-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை நடக்கிறது.

அதன்படி 7-ந் தேதி மேட்டுப்பாளையம் மற்றும் கவுண்டம்பாளையம். 8-ந் தேதி கோவை வடக்கு மற்றும் கோவை தெற்கு, 10-ந் தேதி விழுப்புரம், விக்கிரவாண்டி மற்றும் திண்டிவனம், 11-ந் தேதி விழுப்புரம் வானூர், மயிலம் மற்றும் செஞ்சி, 12-ந் தேதி கடலூர், பண்ருட்டி மற்றும் நெய்வேலி, 14-ந் தேதி கடலூர் குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம்.

15-ந் தேதி சீர்காழி, பூம்புகார் மற்றும் மயிலாடுதுறை. 16-ந் தேதி நன்னிலம், திருவாரூர் மற்றும் நாகை கீழ்வேளூர். 17-ந் தேதி நாகப்பட்டினம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி. 18-ந் தேதி மன்னார்குடி, திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம். 19-ந் தேதி பாபநாசம், தஞ்சை மற்றும் திருவையாறு, 21-ந் தேதி தஞ்சை ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி.

எடப்பாடி பழனிசாமியின் எழுச்சிப் பயணத்திற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள் சிறப்பான முறையில் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

'எடப்பாடி பழனிசாமியின் எழுச்சிப் பயணத்தின்' போது சம்பந்தப்பட்ட கழக மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழக நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும்,

கழக உடன்பிறப்புகளும், பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**மனப்பால் குடிக்கும் ஸ்டாலின்! எடப்பாடி காட்டம்!**

தமிழ்நாடு முழுவதும் திமுக அரசு விளம்பரம் செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு எல்இடி

திரைகளை வழங்க ஒப்பந்தம் கொடுத்துள்ளதாகவும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும், பஞ்சாயத்து கிளர்க்குகளும் அந்த நிறுவனத்திற்கு பணம் தர வேண்டும் என வற்புறுத்தப்படுவதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார். மேலும், விளம்பரங்கள் மூலம் மீண்டும் ஆட்சியைப் பிடித்து விடலாம் என மு.க.ஸ்டாலின் மனப்பால் குடிப்பதாகவும் எடப்பாடி விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்," ஊராட்சி ஒன்றிய நிதி மற்றும் ஊராட்சி நிதியில் வெற்று விளம்பரம் மேற்கொள்ள அரசு பணத்தை செலவிட முனைப்பு காட்டும் விடியா திமுக ஸ்டாலின் மாடல் அரசுக்கு கண்டனம்.

ஆட்சியில் அமர்வது மக்களுக்கு நன்மை செய்வதற்கு என்ற நிலை மாறி, லஞ்ச லாவண்யத்தில் திளைத்து, தங்களை வளப்படுத்துவதற்காகவே என்ற நோக்கோடு விடியா தி.மு.க. ஸ்டாலின் மாடல் அரசு கடந்த 4 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. தங்களது 4 ஆண்டு கால அலங்கோல ஆட்சியினை மூடி மறைக்க, தங்களது ஒவ்வொரு செய்கையையும் நிர்வாகத் திறனற்ற விடியா திமுக ஸ்டாலின் மாடல் அரசு வெற்று விளம்பரங்கள் செய்து வருகிறது.

அதன்படி, லேட்டஸ்டாக விடியா திமுக அரசு, தனது வெற்று விளம்பரங்களை தமிழகம் முழுவதும் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,620 ஊராட்சிகளிலும் வெளியிட வேண்டும் என்று, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளது. அதன்படி மூன்று நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும் என்றும், அதில் மதுரையைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு LED திரைகளைப் பொருத்தும் பணியை வழங்க வேண்டும் என்றும், அதற்காக 385 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் ஒவ்வொன்றும், சந்தை விலையை விட அதிகமாக, அதாவது அந்நிறுவனத்திற்கு ஒரு LED திரைக்கு சுமார் ரூ. 7.50 லட்சம் என்றும், அதேபோல் தமிழகத்திலுள்ள 12,620 ஊராட்சிகள் ஒவ்வொன்றும் சிறிய வகையிலான LED திரையை வாங்க சுமார் ரூ.10,000/- வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும், பஞ்சாயத்து கிளர்க்குகளும் அந்நிறுவனத்திற்கு உடனடியாக கொள்முதல் ஆணையுடன் LED திரைக்கான தொகையையும் வழங்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகின்றனர். தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு, கழிவு நீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் மக்கள் அவதியுற்று வருகிறார்கள்.

ஏற்கெனவே, 2006-2011 ஆட்சி காலத்தில் தமிழக மக்களுக்கு இலவச தொலைக்காட்சி வழங்கி தங்களது குடும்பத் தொலைகாட்சி நிறுவனங்களின் நிதிநிலையை வளர்த்துக்கொண்டது. ஏற்கெனவே 4 ஆண்டுகளாக வெற்று விளம்பரங்களுக்காக கோடிக்கணக்கில் விளம்பரம் கொடுத்தது போக, ஏழை, எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை செய்து தராமல், அந்நிதியை மடை மாற்றும் விடியா திமுக ஸ்டாலினின் (ஏமாற்று) மாடல் அரசின் கடந்த நான்காண்டு கால நடவடிக்கைகள் வேதனையைத்தான் தந்துள்ளது என்று தமிழக மக்கள் கொதித்துப் போயுள்ளனர்.

இந்நிலையில் 4 ஆண்டு சாதனை என்று பொய்யான செய்திகளை வீடியோக்களாகத் தயாரித்து அதை கிராமங்கள்தோறும் LED திரைகள் மூலம் ஒளிபரப்பச் செய்து மக்களை ஏமாற்றி-விடலாம் என்று ஸ்டாலின் மனப்பால் குடிக்கிறார். 'கமிஷன், கலக்ஷன், கரப்ஷன்' என்பதையே கொள்கையாகக் கொண்டு செயல்படும் ஊழல் மாடல் தி.மு.க. அரசு, எல்இடி திரை அமைக்கும் திட்டத்தில் பல கோடி கொள்ளை அடிக்க முயல்வது கண்டனத்திற்குரியதாகும். மக்களின்

வரிப்பணத்தை வீண் விரயம் செய்யும் திட்டத்தை உடனடியாக இந்த அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். நாங்கள் எதுவும் செய்வோம், யாரும் எங்களைக் கேட்க முடியாது என்ற எண்ணத்தில் மக்களின் வரிப் பணத்தை தங்களுடைய சுயநலத்திற்காக செலவிடுவது கண்டிக்கத்தக்கது. அதற்கான விலையை விரைவில் ஏற்படவுள்ள ஆட்சி மாற்றத்திற்குப் பின் தர நேரிடும் என்று எச்சரிக்கிறேன்." என கூறியுள்ளார்.

# தமிழகத்தில் அங்கீகரிக்கப்படாத தனிப்படைகள் கலைப்பு:

## டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவு



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரம் கோயிலுக்கு வந்த பக்தரின் நகை காணாமல் போன விவகாரத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட, கோயில் காவலாளி அஜித் குமார் என்பவர் காவல் துறையினர் தாக்கப்பட்டதால் மரணம் அடைந்தார்.

இந்த விவகாரம் காவல் துறையினரை மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த விவகாரத்தில் 5 போலீசார் கைது செய்யப்பட்டு 15 நாள்கள் நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கின் விசாரணையை சிபிஐக்கு மாற்றி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

கோயில் ஊழியர் அஜித்குமாரை, சாதாரண உடையில் வந்த தனிப்படை போலீசார் அழைத்துசென்று விசாரணை நடத்தியது தெரியவந்தது. இந்த நிலையில், தமிழகம் முழுவதும் காவல்துறையில் அங்கீகரிக்கப்படாத தனிப்படைகளை கலைக்க டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார். மாவட்ட எஸ்.பி மற்றும் டிஎஸ்பி வசம் தனிப்படைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கியுடன் போதைப்பொருள் கும்பல் கைது! போலீஸ் கமிஷனர் பாராட்டு!



சென்னை ஆர்.கே.நகர் பகுதியில் சமீபத்தில் மணிப்பூர் மாநிலத்தைசேர்ந்த பெண் உள்பட 7 போதைப்பொருள் குற்றவாளிகளை தனிப் படை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். இவர்களிடமிருந்து கைதுப்பாக்கி மற்றும் 15தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளும் அவர்களிடம் கைப்பற்றப்பட்டது.

இந்த போதைப் பொருள் கும்பலை மடக்கிப்பிடித்த தனிப்படையில் உதவி கமிஷனர் மனோஜ்குமார், இன்ஸ்பெக்டர்கள் ஜானி செல்லப்பா, ராஜா சிங், சப்-இன்ஸ்பெக்டர்கள் பொன் பாண்டியன், ஜெயக்குமார் உள்ளிட்ட 12 போலீசார் இடம் பெற்றிருந்தனர்.

உயிரை பணயம் வைத்து போதைப் பொருள் கும்பலை தனிப்படை போலீசார் கைது செய்ததை பாராட்டும் விதமாக போலீஸ் கமிஷனர் அருண் தன்னுடைய அலுவலகத்திற்கு அவர்களை நேரில் வரவழைத்தார். அவர்களுக்கு வெகுமதியும், பாராட்டு சான்றிதழும் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், உளவுப் பிரிவு இணை கமிஷனர். தர்மராஜன், துணை கமிஷனர் சக்திவேல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஆவடி காவல் ஆணையரகம் சார்பாக விழிப்புணர்வு மாரத்தான்




ஆவடி காவல் ஆணையரகம் சார்பாக போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கில், ஆவடி காவல் ஆணையரகம் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு போதைப் பொருள் மற்றும் புகையிலை ஒழிப்பிற்கான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயம் ஆவடி காவல் ஆணையரகத்தில் நடத்தப்பட்டது.

இப்போட்டியின் தொடக்க நிகழ்ச்சியில் காவல் ஆணையாளர் .கி.சங்கர், அவர்கள் முன்னிலையில் மாணவ மாணவிகளால் போதை ஒழிப்பு உறுதி மொழி எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியான ஓட்டப்பந்தய போட்டியினை ஆவடி காவல் ஆணையாளர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். மேலும் ஆவடி காவல் ஆணையரகம் சார்பாக போதை ஒழிப்பு விழிப்புணர்வு பாடல் ஒன்றும் காவல் ஆணையாளர் அவர்களால் வெளியிடப்பட்டது.

இவ்விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தய போட்டியில் 58 கல்லூரிகளை சேர்ந்த Anti-Drug Clubs உறுப்பினர்கள் மூலமாக 1215 மாணவர்கள் ஆண்கள் பிரிவிலும் 624 மாணவிகள் பெண்கள் பிரிவிலும் மொத்தம் 1839 மாணவ மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயம் திருமுல்லைவாயல் SM நகர், போலீஸ் கன்வென்சன் சென்டரில் தொடங்கி தமிழ்நாடு சிறப்பு காவல் படை பரணி உணவகம் வரை சென்று மீண்டும் போலீஸ் கன்வென்சன் சென்டரில் முடிவடையும் வகையில் 5 கிலோ மீட்டர் தூரம் மாரத்தான் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாவதாக வந்த முத்தமிழ்செல்வன் என்பவருக்கு ரூ.5000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழும், இரண்டாவதாக வந்த விக்கி என்பவருக்கு ரூ.4000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழும் மூன்றாவதாக வந்த விஷால் என்பவருக்கு ரூ.3000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழும், 4 முதல் 10 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு தலா .2000 ரொக்கப் பரிசுடன் சான்றிதழ்களும், 11 முதல் 35 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு தலா ரூ.1000 ரொக்க பரிசும் சான்றிதழ்களையும் காவல் ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்டன.



பெண்கள் பிரிவில் முதலாவதாக வந்த ஐஸ்வர்யா என்பவருக்கு ரூ.5000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழும், இரண்டாவதாக வந்த விஷாலி என்பவருக்கு ரூ.4000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழும் மூன்றாவதாக வந்த ஷாலு என்பவருக்கு ரூ.3000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழும், 4 முதல் 10 இடங்களைப் பிடித்த மாணவிகளுக்கு தலா ரூ.2000 ரொக்க பரிசுடன் சான்றிதழ்களும், 11 முதல் 25 இடங்களைப் பிடித்த மாணவிகளுக்கு தல ரூ.1000 ரொக்க பரிசுடன் சான்றிதழ்களும், சிறப்பு பரிசாக மாற்றுத்திறனாளி மாணவியான லட்சுமி பிரியா என்பவருக்கு ரூ.2000 ரொக்க பரிசும் சான்றிதழும், மேலும் இவ்விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் கலந்துக்கொண்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கும் சான்றிதழ்களை காவல் ஆணையாளர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.



# 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் விவசாயம் சார்ந்து இருந்த மக்கள்தொகை 40% இருந்து 20% குறைந்துவிட்டது! மாநில திட்டக்குழு அறிக்கை!

தமிழக அரசுக்கு உறுதுணையாக இருப்பது மாநில திட்டக்குழுவாகும். இது முதல்-அமைச்சரின் தலைமையில் செயல்படும் ஒரு உயர்மட்ட ஆலோசனை குழுவாகும். இந்த குழு தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் முன்னோடி மக்கள் நலத்திட்டங்களை மதிப்பீடு செய்து அறிக்கையாக அரசிடம் தாக்கல் செய்கிறது. இதன்மூலம் நிறைவேற்றி செயல்படுத்தும் திட்டங்கள் மக்களுக்கு போய் சென்றடைந்துள்ளதா? உரிய பலன் கிடைத்துள்ளதா? அந்த திட்டத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்யவேண்டியது இருக்கிறதா? என்பதை அரசு தெரிந்துகொள்ளமுடியும்.

இதுபோல ஏதேனும் புதிய கொள்கை முடிவுகளை அரசு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதா? என்பதையும் திட்டக்குழு நன்கு ஆராய்ந்து அறிக்கையாக அரசிடம் வழங்குகிறது. பொதுவாக திட்டக்குழுவின் ஆய்வுகளும், பரிந்துரைகளும் அரசுக்கு மிகுந்த நன்மை பயப்பதாக இருக்கிறது. தற்போது தமிழக திட்டக்குழுவின் தலைவராக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும், துணை தலைவராக ஜெயரஞ்சனும், உறுப்பினர்-செயலராக இந்திய வனப்பணி அதிகாரி சுதா மற்றும் உறுப்பினர்களும் பணியாற்றுகிறார்கள்.

இந்த குழு கடந்த வாரம் திங்கட்கிழமையன்று தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030-நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் தொலைநோக்கு ஆவணம், தமிழ்நாட்டில் வாகன உற்பத்தி துறையின் எதிர்காலம், தமிழ்நாட்டை அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி-வடிவமைக்கும் பாதை என்ற தலைப்புகளின் கீழ் 4 அறிக்கைகளை தாக்கல் செய்தது.

இதில் முதல் அறிக்கை தமிழ்நாட்டில் வேளாண் தொடர்பான நிலையை அப்படியே படம் பிடித்துக்காட்டியது. தமிழ்நாட்டில் 2012 முதல் 2024 வரையிலான காலக்கட்டத்தில் உள்ள விவசாய நிலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் விவசாயத்தை சார்ந்து இருந்த மக்கள்தொகை 40 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக குறைந்துவிட்டது. அதாவது விவசாயத்தை சார்ந்து இருந்த 20 சதவீத மக்கள் விவசாயம் அல்லாத வேறு வேலைகளுக்கு மாறி-விட்டனர். மொத்தத்தில் 81 சதவீத ஆண்களும், 71 சதவீத பெண்களும் விவசாயம் சார்ந்த வேலைகளில் இருந்து வேறு பணிகளுக்கு சென்றுவிட்டார்கள். இவர்கள் பெரும்பாலும் கட்டிட வேலைக்குத்தான் செல்கிறார்கள். குறிப்பாக இளம்வயதினர் கட்டிட வேலைக்கு செல்வதற்கே முன்னுரிமை கொடுக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் கிடைக்கும் கூலிதான்.

எடுத்துக்காட்டாக கட்டிட வேலைக்கு சென்றால் குறைந்தது ரூ.800 கூலியாக கிடைக்கிறது. ஆனால் விவசாய வேலைகளில் அவ்வளவு சம்பளம் கிடைப்பதில்லை. மேலும் விவசாயத்தில் குறிப்பிட்ட நாட்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. இதுவே விவசாய பணிகளுக்கு ஆட்கள் செல்லாததற்கு காரணமாகும். பெண்களை பொறுத்தமட்டில் உற்பத்தி துறைக்கே அதிகம் பேர் வேலைக்கு செல்கிறார்கள். அவர்களில் வயது வித்தியாசம் இல்லாமல் உற்பத்தி துறை சார்ந்த பணிகளுக்கு செல்வதையே விரும்புகிறார்கள்.

மேலும் சொந்தமாக விவசாய நிலம் வைத்திருப்பவர்கள் கூட தானியங்கி முறையில் பல பணிகளை செய்யமுடிவதால், அந்த பணிகளோடு விவசாயம் சாராத வேலைகளுக்கு சென்று வருவாய் ஈட்டிக்கொள்கிறார்கள். ஆக விவசாயத்தை காப்பாற்ற வேண்டுமென்றால் எந்திரமயமாக்குவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். உழுவது முதல், விதைப்பது, களை எடுப்பது, நீர் பாய்ச்சுவது, வரப்புகளாக சீர் செய்வது, அறுவடை செய்வது என அனைத்து பணிகளும் இப்போது எந்திரமயமாகிவிட்டது இங்கே குறிப்பிடத்தக்கதாக பார்க்கப்படுகிறது.

# SIP முதலீட்டில் நீங்கள் செய்யும் சிறு தவறு.. பெரிய பிரச்சினை.. கவனம் தேவை!




இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் ஆர்வத்துடன் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களில் முதலீடு செய்கின்றனர். மியூச்சுவல் ஃபண்ட் SIP திட்டத்தில் ரிஸ்க் இருந்தாலும் அதில் சரியான ஆலோசனையுடன் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும். ஆனால் இதில் முதலீடு செய்யும்போது சில விஷயங்களில் முதலீட்டாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மியூச்சுவல் ஃபண்டில் SIP முதலீட்டைத் தொடங்கும்போது ஒவ்வொரு மாதமும் உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து ஒரு நிலையான தொகை தானாகவே கழிக்கப்பட்டு முதலீடு செய்யப்படும் குறிப்பிட்ட தேதியை நீங்கள் தேர்வு செய்வீர்கள்.

இது வழக்கமான முதலீட்டுக்கான எளிய மற்றும் பயனுள்ள வழியாகும். ஆனால் அந்த தேதியில் உங்கள் கணக்கில் பணம் இல்லையென்றால் பிரச்சினைதான். அந்த மாதத்திற்கான SIP தொகை கழிக்கப்படாது. அதாவது உங்கள் பணம் முதலீடு செய்யப்படாது. மேலும், தோல்வியுற்ற பரிவர்த்தனைக்கு வங்கி உங்களிடம் கட்டணம் வசூலிக்கும். இப்படி அடிக்கடி தொடர்ந்தால், மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனமும் உங்கள் SIP கணக்கை மூடிவிடும். எனவே, SIP திட்டத்துக்கான தொகை கழிக்கப்படும் தேதியில் உங்கள் வங்கிக் கணக்கில் பணம் இருக்க வேண்டும். இதனால் உங்கள் முதலீடு ஒவ்வொரு மாதமும் சீராக இருக்கும்.

**SIP பேமெண்ட் தோல்வியடைந்தால் என்ன ஆகும்?**

உங்களுடைய கணக்கில் இருந்து வங்கி பணம் செலுத்த முயற்சி செய்யும். ஒருவேளை கணக்கில் பணம் இல்லாவிட்டால் பரிவர்த்தனை தோல்வியடையும். இது தவறவிட்ட SIP தவணை என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் SIP கணக்குக்கு ECS / NACH (எலக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம்) விண்ணப்பித்திருந்தால் நேஷனல் ஆட்டோமேட்டட் கிளியரிங் ஹவுஸில் (என்ஏஎஸ்சி) வங்கி பதிவு செய்யப்பட்டு, பணத்தை டெபிட் செய்யத் தவறினால் வங்கி உங்களுக்கு 'பவுன்ஸ் கட்டணம்' விதிக்கலாம். வங்கி விதிகளின்படி இந்தத் தொகை பொதுவாக ரூ.150 முதல் ரூ. 500 வரை இருக்கலாம்.

SIP முதலீட்டில் சில தவணைகளைத் தவறவிட்டால், ஏஎம்சி (அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனம்) முதலீட்டாளரின் SIP கணக்கை தானாகவே மூடலாம் என்று பங்குச் சந்தை ஒழுங்குமுறை ஆணையமான செபி கூறுகிறது. 3 முதல் 5 தவணைகளைத் தொடர்ந்து தவறவிட்டால் பிரச்சினைதான். SIP பரிவர்த்தனை தோல்வி அடைந்தால் கிரெடிட் ஸ்கோரை பாதிக்காது. இருப்பினும், வங்கி ணிசிஷி தோல்வி பற்றிய தகவலை சிபில் கணக்குக்கு மீண்டும் மீண்டும் அனுப்பினால், அது பிரச்சினையாக மாறிவிடும்.

**SIP திட்டத்தின் நன்மைகள்!**

SIP முதலீட்டின் மிகப்பெரிய நன்மை என்னவென்றால், வழக்கமான முதலீடு மற்றும் கூட்டு நன்மைகள் காலப்போக்கில் அதிகரிக்கும். ஆனால் SIP மீண்டும் மீண்டும் தோல்வியடைந்தால் உங்கள் முதலீடு பாதிக்கப்படும். இது சில பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. முதலில், உங்கள் நீண்ட கால இலக்குகளுக்கு பிரச்சினை ஏற்படலாம். நீங்கள் நிர்ணயித்த இலக்குத் தொகை சரியான நேரத்தில் எட்டப்படாது. SIP முதலீட்டில் நீங்கள் செய்யும் ஒரு சிறிய தவறு உங்கள் முழு நிதி திட்ட இலக்கையும் பாதிக்கலாம். எனவே இந்த விஷயத்தில் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும்.

# தமிழக பள்ளிகளில் "வாட்டர்பெல்" திட்டம்

## மாணவ, மாணவிகளின் நீர்சத்து குறைபாட்டை போக்கும் வகையில் அமலுக்கு வந்தது



மாணவர்கள் அடிக்கடி தண்ணீர் குடிப்பது என்பது நல்ல ஆரோக்கியத்துக்கு தேவையான ஒன்றாகும். உடலில் நீர்ச்சத்து குறைந்தால் பல சுகாதாரக்கேடுகள் வரும் என்பது டாக்டர்களின் கூற்றாகும். அதனால்தான் தினமும் 2 லிட்டர் முதல் 3 லிட்டர் வரை தண்ணீர் குடிக்கவேண்டும் என்பது டாக்டர்களின் அறிவுரையாகும். அதிலும் குறிப்பாக, வளரும் பருவத்தில் அடிக்கடி தண்ணீர் குடிக்கவேண்டும் என்பதால்தான் அனைத்து பள்ளிக்கூடங்களிலும் குடிநீர் வசதி இருக்கவேண்டும் என்பது ஒரு விதியாக இருக்கிறது. "அனைத்து இயற்கைக்கும் தண்ணீர்தான் உந்துசக்தி'' என்று ஓவியரும், விஞ்ஞானியுமான லியோனார்டோ டா வின்சி கூறியிருக்கிறார். இதனால் இப்போது பள்ளிக்கூட கல்வித்துறை அமைச்சர், அனைத்து பள்ளிக்கூடங்களிலும் "வாட்டர் பெல்'' என்ற ஒரு திட்டத்தை அமல்படுத்த உத்தரவிட்டு, அதுவும் நடைமுறைக்கு வந்துவிட்டது.

இதன்படி அனைத்து மாணவர்களும் வீட்டில் இருந்து வரும்போதே தண்ணீர் நிரப்பப்பட்ட பாட்டிலையோ அல்லது காலிபாட்டிலையோ கொண்டுவரவேண்டும். காலிபாட்டில் கொண்டுவந்தால், பள்ளிக்கூடங்களில் உள்ள குடிநீர்வசதியை பயன்படுத்தி பாட்டில்களில் தண்ணீர் நிரப்பிக்கொள்ளலாம். தினமும் பள்ளிகளில் நடக்கும் காலை வணக்கக்கூட்டத்தில் மாணவர்களுக்கு தண்ணீர் குடிப்பதன் அவசியத்தை விளக்கிக்கூற வேண்டும். மாணவர்கள் தண்ணீர் குடிப்பதற்காக ஒலிக்கப்படும் மணி, வழக்கமாக அந்த பள்ளியில் அடிக்கப்படும் மணி சத்தத்தைவிட சற்று மாறுபட்டதாக இருக்கவேண்டும். மாணவர்களிடம், அந்த மணி சத்ததைக்கேட்டால் உடனடியாக தண்ணீர் பாட்டிலை எடுத்து தங்கள் தேவைக்கேற்ப தண்ணீர் குடிக்க அறிவுறுத்தவேண்டும். அதாவது, மணி அடித்தால்

அது தண்ணீர் வேளை, அது வாட்டர் பெல் என்பதை கற்றுக்கொடுக்க வேண்டும். தினமும் காலை 11 மணி இடைவேளையின்போதும், பகல் ஒரு மணிக்கு மதிய உணவுவேளையின்போதும், பிற்பகலில் 3 மணி இடைவேளையின்போதும் இந்த மணி ஒலிக்கப்பட வேண்டும்.

தண்ணீர் குடிப்பதற்காக எந்த மாணவரும் வகுப்பு அறையை விட்டு வெளியே செல்ல ஆசிரியர்கள் அனுமதிக்கக்கூடாது. வகுப்பு சூழ்நிலையை பாதிக்காமல் வகுப்பறையில் இருந்தே குடிநீர் பாட்டிலை எடுத்து தண்ணீர் குடிக்க 2 அல்லது 3 நிமிடங்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஒதுக்கலாம். இதுதொடர்பாக பள்ளிக்கல்வித்துறை இயக்குனர் எஸ்.கண்ணப்பன், அனைத்து பள்ளிக்கூடங்களுக்கும் மாவட்ட முதன்மைக்கல்வி அதிகாரிகள் மூலமாக ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். மேலும், பள்ளிக்கூடங்களிலும் மாணவர்கள் கொண்டுவரும் பாட்டில்களில் தண்ணீர் நிரப்பிக்கொள்ள சுத்தமான தண்ணீரை வைத்து முறையாக பராமரிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

பள்ளிக்கூடங்களில் இவ்வாறு வகுப்புகள் நடக்கும்போதே தண்ணீர் குடிக்க அனுமதிப்பது, அவர்களுக்கு பாடத்தின் மீது உள்ள கவனத்தை அதிகரிக்க செய்யும். அவர்களுடைய நினைவாற்றலையும் அதிகரிக்கும். மனித மூளை 75 சதவீதம் நீராலானது. எனவே போதுமான அளவு தண்ணீர் குடித்தால் அதன் செயல்பாடு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும், தலைவலி மற்றும் சோர்வை தடுக்கும். மனநிலை மற்றும் நம் ஒவ்வொருவரின் நடத்தையை நீர்ச்சத்து குறைபாடு பாதிக்கும். பல ஆரோக்கியமான பழக்கங்களை ஊக்குவிக்கும் எனவும் அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த நல்ல முடிவை பள்ளிக்கல்வித்துறை எடுத்தது மிகவும் பாராட்டுக்குரியது. சுலோவேகியா நாட்டில் சுத்தமான தண்ணீர்தான் உலகிலேயே முதலாவது மற்றும் முதன்மையான மருத்துவமாகும் என்ற முதுமொழி, தமிழ்நாட்டில் இந்த வாட்டர் பெல் திட்டத்தின் வாயிலாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பள்ளிகளில் இந்த திட்டம் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் சூழலில், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை மாணவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் வழங்குவதும், கல்வித் துறையின் நடவடிக்கையில் அவசியமான ஒன்று.

9444010700 | 8668141500
rameshkumar7hills@gmail.com
Er.K Ramesh kumar
CMDA & Chennai Corporation Approved
Registered Engr / Consultant

# அன்றாட சமையலுக்கு அசத்தலான எளிய சமையல் குறிப்புகள்



அசத்தலான இந்த சமையல் குறிப்புகள் இல்லத்தரசிகளுக்கு ரொம்பவே பயனுள்ளதாக இருக்கப் போகிறது. சின்ன சின்ன பொருட்களை சமையலறையில் பாதுகாப்பாக வைப்பது முதல், சுவை கூட்டும் சமையல் ரகசியங்கள் வரை நிறையவே நமக்கு கற்றுக் கொள்ள வேண்டி-யிருக்கிறது. அவ்வகையில் இல்லத்தரசிகளுக்கு தேவைப்படக்கூடிய முக்கியமான 12 குறிப்புகளை இந்த பதிவில் தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

- மெதுவடை தயாரிக்கும் பொழுது உளுந்துடன் சிறிதளவு துவரம் பருப்பை சேர்த்து நன்கு கெட்டியாக ஆட்டி வடை தயாரித்து பார்த்தால் வடை மிருதுவாக சுட வரும்.
- பூரி அதிக நேரம் நமத்து போகாமல் இருக்க மாவை பிசையும் பொழுது அரை ஸ்பூன் சர்க்கரை சேர்த்து பிசைந்தால் நீண்ட நேரம் உப்பலாக அப்படியே மொறு மொறுன்னு இருக்கும்.
- வாழைத்தண்டு, வாழை மரம் வீட்டில் இருந்தால் வாழை பட்டையை எடுத்து வையுங்கள். இந்த பட்டையில் கொத்தமல்லி, கருவேப்பிலை, புதினா போன்ற இலைகளை சுருட்டி வைத்தால் நீண்ட நாட்கள் வாடாமல் பிரஷ்ஷாக இருக்கும்.
- முருங்கை இலைகளை ஆய்வதற்கு சிரமப்படுபவர்கள் அதை வாங்கி வந்த உடன் ஒரு பெரிய அளவிலான நியூஸ் பேப்பரில் சுருட்டி வையுங்கள். காலையில் பார்த்தால் முக்கால்வாசி இலை தானாகவே பேப்பரில் உதிர்ந்திருக்கும்.
- தேங்காயை உடைத்தவுடன் தேங்காய் மூடியை ஒரு பாத்திரத்தில் கவிழ்த்தி ஃப்ரிட்ஜில் வைத்தால் நீண்ட நாட்கள் பிரஸ் ஆக இருக்கும். இல்லையேல் நீங்கள் மூடியை தண்ணீரில் வைக்கலாம் அல்லது மூடியின் மீது சிறிதளவு உப்பை தேய்த்து வைத்தாலும் கெட்டுப் போகாது.
- பூண்டு வாங்கி வந்த உடன் அதை உதிர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். உதிர்த்த பின்பு சிறிதளவு கேழ்வரகு போட்டு வைத்தால் சீக்கிரம் புழு பிடிக்காமல், நமத்து போகாமல் இருக்கும்.
- வெங்காயத்தை நறுக்கியவுடன் பயன்படுத்த வேண்டும் இல்லையேல் காற்றில் இருக்கும் பாக்டீரியாக்கள் எளிதில் அதில் போய் உட்கார்ந்து கொள்ளும். அப்படி நறுக்கியவுடன் பயன்படுத்த முடியாதவர்கள் சிறிதளவு வெண்ணையை தடவலாம், வாடாமல் அப்படியே இருக்கும்.
- சாம்பார் வைக்க துவரம் பருப்புடன் ஒரு ஸ்பூன் அளவிற்கு வெந்தயம் சேர்த்து வேக வைக்கவும் இதனால் சாம்பார் காலையில் வைத்தாலும் இரவு வரை கெட்டுப் போகாமல் அப்படியே பிரஷ்ஷாக இருக்கும்.
- வத்த குழம்பு மற்றும் அசைவ குழம்பு வகைகள் வைக்கும் பொழுது கடைசியாக சிறிதளவு மிளகுத்தூளை சேர்த்து கலந்து விட்டு இறக்கிப் பாருங்கள் அதன் மணம் மற்றும் சுவை ஆளை தூக்கும்.
- வெண்டைக்காய் வதக்கும் பொழுது சிறிதளவு சர்க்கரை சேர்த்து வதக்கினால் அதன் பிசுபிசுப்பு தன்மை சீக்கிரம் போகும் மேலும் சிறிதளவு புளிப்பான மோரை சேர்த்தால் மொறுமொறுன்னு கிரிஸ்ப்பியாக வதங்கும்.
- வெறும் மூணே விசில் தான் பருப்பு, பால், எதுவும் சேர்க்காமல் குக்கரில் சர்க்கரை பொங்கல் சட்டுனு ரெடி பண்ணிடலாம். அட இப்படியும் கூட ஈஸியா பொங்கல் வைக்கலாமா!
- எந்த சூப் செய்தாலும் சிறிதளவு பொட்டுக்கடலை மாவை தண்ணீரில் கரைத்து சூப்புடன் சேர்த்து செய்து பாருங்கள், சூப் கெட்டியாக, டேஸ்ட்டியாக இருக்கும்.
- கூட்டு, பொரியல், வறுவல் போன்றவற்றில் உப்பு அல்லது காரம் அதிகமாக சேர்த்து விட்டால் சிறிதளவு ரஸ்க் தூளை பொடித்து சேர்த்து பாருங்கள் உப்பு, காரத்தை அது ஈர்த்துக் கொண்டுவிடும்.

# தட்கல் டிக்கெட்டுக்கு இனி ஆதார் தேவை

ரெயில் பயணத்துக்கே அனைவரும் முன்னுரிமை கொடுக்கிறார்கள். இதற்கு காரணம் தூங்கும் வசதி, கழிப்பறை வசதி போன்ற பல்வேறு சவுகரியங்களை சொல்லலாம். ஒவ்வொரு ரெயிலும் 2 அல்லது 3 முன்பதிவு அல்லாத பெட்டிகள் தவிர மற்ற பெட்டிகளெல்லாம் அதாவது படுக்கை வசதி கொண்ட சாதாரண பெட்டி மற்றும் குளு, குளு வசதிகளை கொண்ட மூன்றாம் வகுப்பு, 2-ம் வகுப்பு, முதல் வகுப்பு பெட்டிகள் இருக்கின்றன. இந்த பெட்டிகளில் பயணிக்க டிக்கெட்டுகளை 60 நாட்களுக்கு முன்பே முன்பதிவு செய்யமுடியும். இருந்தாலும் சில நாட்களிலேயே இந்த முன்பதிவு டிக்கெட்டுகளும் விற்று தீர்ந்துவிடுகின்றன. கடைசிநேரத்தில் பயணம் திட்டமிடுபவர்களுக்காக ரெயில்வே நிர்வாகம் தட்கல் வசதியை நடைமுறையில் வைத்திருக்கிறது.

இந்த முறையின்படி ஒவ்வொரு ரெயிலிலும் சில குறிப்பிட்ட எண்ணிக்கையில் முன்பதிவு பெட்டிகளில் பயணம் செய்ய இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இந்த தட்கல் டிக்கெட்டினை 24 மணி நேரத்துக்கு முன்னதாக மட்டுமே எடுக்க முடியும். இந்த டிக்கெட்டுகளுக்கு வழக்கமான கட்டணத்தை விட, தட்கல் கட்டணத்தையும் சேர்த்து கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும். தட்கல் டிக்கெட்டுகளை குளுமை வசதி கொண்ட பெட்டிகளுக்கு பயண நாளுக்கு முந்தைய தினம் காலை 10 மணிக்கும், படுக்கை வசதிகொண்ட சாதாரண பெட்டிக்கு 11 மணிக்கும் ஆன்லைன் மூலமாகவோ, ரெயில் நிலைய கவுண்ட்டர்களிலோ பெற்றுக்கொள்ளலாம்.

இந்த தட்கல் டிக்கெட் எடுப்பதிலும் பல முறைகேடுகள் மற்றும் ஆள்மாறாட்டம் இருப்பதாக புகார்கள் வந்தன. பொதுவாக புரோக்கர்கள், ஏஜெண்டுகள் மூலமாகத்தான் டிக்கெட்டுகளை எளிதில் எடுக்கமுடிகிறது என்ற குறை பொதுமக்களுக்கு நிறைய இருந்தது. இதையெல்லாம் போக்கும் வகையில் யார் பயணம் செய்கிறார்களோ அவர்களுக்கே டிக்கெட் கிடைக்க ரெயில்வே நிர்வாகம் புதிய நடைமுறைகளை கொண்டுவந்துள்ளது. இதன்படி ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் மற்றும் செயலி மூலம் தட்கல் டிக்கெட் எடுப்பவர்களுக்கு ஆதார் பதிவு வருகிற ஜூலை 1-ந்தேதி முதல் கட்டாயமாகிறது. இதன் தொடர்ச்சியாக ஆதார்




ஓ.டி.பி.யை பதிவுசெய்தால்தான் 15-ந்தேதி முதல் தட்கல் டிக்கெட் பெறமுடியும். ஆதார் இல்லாதவர்களும், ஆதார் பதிவை செய்ய விரும்பாதவர்களும் ரெயில் நிலைய கவுண்ட்டர்களுக்கு சென்றுதான் டிக்கெட் எடுக்கமுடியும். அவர்களும் தங்கள் செல்போனுக்கு வரும் ஓ.டி.பி.யை கொடுத்துதான் முன்பதிவு செய்யமுடியும். இந்த முறை வரவேற்கத்தக்கது. முறைகேட்டுக்கு இடம் இல்லாமல் உரியவர்களுக்கு சரியான நேரத்தில் டிக்கெட் கிடைக்கும் என்றாலும், இதில் சில நடைமுறை சிக்கல்களும் இருக்கின்றன. எப்போதும் தட்கல் டிக்கெட்டுகள் ஓரிரு நிமிடங்களில் விற்று தீர்ந்துவிடுகின்றன.

இனி ஆதார் ஓ.டி.பி. கட்டாயம் என்பதால், அந்த ஓ.டி.பி. வந்த உடன் தான் தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்யமுடியும். ஆதார் ஓ.டி.பி. காலதாமதமாக வந்தால் தட்கல் டிக்கெட் எடுப்பதில் சிக்கல் ஏற்படும். ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் ஆதார் ஓ.டி.பி.க்காக காத்து இருக்கும்போது சிலருக்கு டிக்கெட் கிடைத்து, பலருக்கு கிடைக்காமல் போகவும் வாய்ப்பு இருக்கிறது. அதேபோல வீட்டில் வயதானவர்களுக்காக பிள்ளைகள் தங்கள் அலுவலகத்தில் இருந்தபடி தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்வார்கள். இனி ஆதார் ஓ.டி.பி. கட்டாயம் என்பதால் பெற்றோரின் செல்போனுக்கு செல்லும் ஓ.டி.பி.யை பிள்ளைகள் வாங்கி டிக்கெட் முன்பதிவு செய்வது என்பது பெரும் சிரமத்தை ஏற்படுத்தும். இதையெல்லாம் ரெயில்வே நிர்வாகம் ஆழ்ந்து, பரிசீலித்து உரிய முன்னேற்பாடுகளை எடுக்கவேண்டும்.

# போலீசாரின் புலன் விசாரணையில் மாற்றம் கொண்டுவர பயிற்சி அளிக்கப்படுமா?



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் போலீஸ் நிலையத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தந்தை, மகன் மரணத்தின் வடுக்கள் கூட இன்னும் மாறாத நிலையில் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் போலீசார் விசாரணையில் அஜித்குமார் என்ற 28 வயது கோவில் காவலாளி அடித்து கொல்லப்பட்டார். அவர் அங்குள்ள பத்ரகாளியம்மன் கோவிலில் ஒப்பந்த காவலாளியாக பணிபுரிந்தார். அங்கு சாமி கும்பிட வந்த திருமங்கலத்தை சேர்ந்த நிகிதா என்ற பெண் தன்னுடைய நகை, பணத்தை காணவில்லை என்று போலீசில் புகார் அளித்தார்.

இதன் தொடர்ச்சியாக அஜித்குமாரை போலீசார் பிடித்து விசாரணைக்காக அழைத்து சென்று கொடூரமாக தாக்கியதால் உடலில் 44 காயங்கள் ஏற்பட்டு உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக 5 போலீசார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கும் சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கிடையில் கூடுதல் போலீஸ் டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம் வீடியோ கான்பிரன்ஸ் மூலம் அனைத்து போலீஸ் அதிகாரிகளிடமும் பேசி, எதிர்காலத்தில் இப்படி ஒரு சம்பவம் நடைபெறாமல் இருக்க பல அறிவுறுத்தல்களை வழங்கினார்.

காவல் நிலையத்தில் யாரும் புகார் அளிக்க வந்தால், உடனடியாக எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்படவேண்டும் அல்லது சி.எஸ்.ஆர். என்ற ஒப்புகை சீட்டை கொடுக்கவேண்டும். விசாரணை கைதிகளை துன்புறுத்தக்கூடாது. தேவை இல்லாமல் போலீஸ் காவலில் வைக்கக்கூடாது. ஒருவரை 3, 4 போலீஸ்காரர்கள் ஒன்றாக சேர்ந்து விசாரிக்கக்கூடாது. போலீஸ் காவலில் மரணம் இருக்கவே கூடாது. லத்திகளை பயன்படுத்தக்கூடாது. போலீஸ்காரர்கள் கட்டப்பஞ்சாயத்துகளில் ஈடுபடக்கூடாது. குற்றவழக்குகள் விசாரணையில் நல்ல முன் அனுபவம் உள்ள திறமைவாய்ந்த போலீஸ்காரர்களைத்தான் பயன்படுத்தவேண்டும் என்பது போன்ற உத்தரவுகளை அடுக்கடுக்காக பிறப்பித்துள்ளார். இதுமட்டுமல்லாமல் இப்போதுள்ள புலன் விசாரணை மாற்றப்பட்டு அறிவியல் பூர்வமான விசாரணை நடத்த போலீசாருக்கு பயிற்சி அளிக்கவேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு கியூ பிரிவு போலீஸ் சூப்பிரண்டு, ஒரு பயங்கரவாதியிடம் நடத்திய புலன் விசாரணை இன்றளவும் பேசப்படுகிறது. பயங்கரவாதியிடம் அவர் தினமும் இரவு 8 மணிக்கு சென்று பிரியாணி, டீ எல்லாம் வாங்கிக்கொடுத்து அதிகாலை 5 மணி வரை நட்பு ரீதியாக பேசி, அதற்கு பிறகுதான் தூங்கவிடும் விசாரணையை தொடர்ச்சியாக நடத்தினார். 5 நாட்களுக்கு பிறகு அந்த பயங்கரவாதி தானாகவே வெடிகுண்டுகள் சென்னை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு படகில் வைத்திருந்ததை சொல்லிவிட்டான். ஒரு அடி கூட அடிக்காமல் விசாரணை நடத்திய அந்த பாங்கை இதுபோன்ற விசாரணைகளில் போலீஸ்காரர்கள் பின்பற்றவேண்டும். மேலும் அனைத்து போலீஸ்காரர்களின் அணுகுமுறையில் மாற்றம் கொண்டுவர பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும்.

இதுபோல அத்துமீறல்களோடு சமீபகாலங்களாக நடக்கும் என்கவுண்ட்டர்களையும் போலீசார் தவிர்க்கவேண்டும். அடிக்காமல், உதைக்காமல், என்கவுண்ட்டர் செய்யாமல் புலன் விசாரணை செய்வதில்தான் திறமை இருக்கிறது என்பதை தமிழக காவல் துறையினர் அனைவருக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் காவல் நிலைய மரணங்களுக்காக தமிழ்நாட்டில் ஒரு வழக்கை தவிர மற்ற வழக்குகளில் போலீசார் தண்டிக்கப்படவில்லை என்பதையும் புறந்தள்ளிவிடமுடியாது. ஆக தொடக்கத்தில் பரபரப்பாக பேசப்படும் இதுபோன்ற வழக்குகள் நாளடைவில் நீர்த்துபோய்விடுகிறது. அதுபோன்ற நிலை இனிமேலும் இருக்கக்கூடாது. சாத்தான்குளம், திருப்புவனம் காவல் விசாரணை சம்பவங்களில் கைது செய்யப்பட்ட காவலர்களின் வாழ்க்கையே போய்விட்டது. இனி ஒருபோதும் அவர்கள் காக்கி சட்டை அணியமுடியாது. இதையெல்லாம் அனைத்து காவல்துறையினரும் உணரவேண்டும்.

# காவல்துறையில் வழங்கப்படும் CSR என்றால் என்ன?

CSR என்பது காவல்நிலையத்தில் பதிவு செய்யப்படும் சேவை பதிவேடு ஆகும். இது குறிப்பாக இந்திய காவல்நிலையத்தில் தெளிவுபெறாத குற்றத்திற்காக பராமரிக்கப்படும் பதிவேடு ஆகும். தெளிவு பெற்ற குற்றமாக இருந்தால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை (FIR) உருவாக்கப்பட்டு குற்ற வழக்கு பதிவு செய்யப்படும்.

ஒரு குற்றம் நடந்து அந்த குற்றத்திற்காக நீங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கிறீர்கள் அப்போது அதை பதிவு செய்து அந்தப் புகாரினை ஏற்றுக்கொண்டதற்கு சான்றாக காவல்துறை அலுவலர் CSR என்ற ரசீது ஒன்று கொடுப்பார். இந்த CSR-ன் முழுமையான ஆங்கில விளக்கம் Community Service Register என்பது ஆகும். இதை தமிழில் சமூக சேவை பதிவு என்றும் கூறலாம். மேலும் இந்த CSR-ஐ மனு ஏற்புச் சான்றிதழ் என்றும் தினசரி டைரி அறிக்கை என்றும் சொல்லலாம், இதற்கு இது போன்ற பல பெயர்கள் இருந்தாலும் மனு ரசீது என்பதே அனைவராலும் அறியப்பட்ட ஒன்று ஆகும்.

எனவே நம் புரிந்துகொள்ள வேண்டியது காவல் நிலையத்தில் கொடுக்கப்படும் புகாரை விசாரணை செய்வதற்கு முன் காவல் நிலையத்தில் காவல் அதிகாரியால் கொடுக்கப்படும் புகார் மனு ரசீதுதான் CSR இந்த என்பதில் உங்களுக்கு குழப்பம் வேண்டாம்.

**CSR எந்த வழக்கில் பதிவு செய்யப்படுகிறது?**

CSR என்ற சமூக சேவை பதிவேடு என்பது ஒவ்வொரு இந்திய காவல் நிலையத்திலும் அறியப்படாத குற்றத்திற்காக பராமரிக்கப்படும் பதிவேடு ஆகும். குற்றம் அறியக்கூடிய குற்றமாக இருந்தால், முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. ஒரு சிஎஸ்ஆர் தினசரி டைரி அறிக்கை அல்லது டைரி அறிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.

**குறிப்பு:** CSR என்ற சேவைப் பதிவேடு ஒவ்வொரு இந்திய காவல் நிலையத்திலும் அடையாளம் காண முடியாத குற்றத்திற்காக பராமரிக்கப்படும்




பதிவேடு ஆகும். குறிப்பு ஆனால் அறியக்கூடிய குற்றம் மற்றும் குற்றம் செய்கிற குற்றவாளி மீது முதல் தகவல் அறிக்கை அதாவது FIR பதிவு செய்யப்படுவதால் CSR வழங்கப்படாது. அந்த குற்றவாளி மீது புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாருக்கு புகார் மனு ரசீது CSR கிடைக்காதா என்றால் நிச்சயமாக கிடைக்கும். ஆனால் FIR பதிவு செய்தவுடன் அதுவே கொடுத்த புகாருக்கான அறிக்கையாக இருப்பதால் பதிவு செய்யப்பட்ட வழக்கில் CSR-ரை நாம் பெறுவது இல்லை.

**இந்தியாவில் எந்த சட்டத்தின் அடிப்படையில் CSR பதிவு செய்யப்படுகிறது?**

நீங்கள் அளித்த புகாரின்படி விசாரணை செய்து, கைது செய்யப்படக்கூடிய குற்றம் நடந்திருக்கிறது என்று தெரிய வந்தால் முதல் தகவல் அறிக்கை (FIR) தயார் செய்து குற்ற விசாரணை முறைச் சட்டம், (Cr.P.C) 1973 – பிரிவு 154ன்படி குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**புகார் அளித்த நபருக்கு CSR மற்றும் FIR நகல் வழங்கப்படுமா?**

ஆம் புகார் அளித்த நபருக்கு CSR மற்றும் முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்று இலவசமாக காவால் நிலையத்தில் வழங்கப்படும்.

# மாணவர்களின் ஒழுக்கத்தின் முக்கியத்துவம்!

பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் யார் அதிகம் பதிவு போடுவது என்ற போட்டியில் அரசுப் பள்ளி மாணவிகள் கைகலப்பில் ஈடுபட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திருப்பூரில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் சில மாணவிகள் ஒன்றுசேர்ந்து இன்ஸ்டாகிராமில் குழு தொடங்கி தாங்கள்தான் “கெத்து’ என்ற ரீதியில் பதிவிட்டு வந்துள்ளனர். திருப்பூரில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள பல்லடம் ஒன்றியத்தில் உள்ள அரசுப் பள்ளி மாணவிகளும் இதுபோன்ற குழு அமைத்து இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு வந்ததில் போட்டி ஏற்பட்டுள்ளது.

இதனால் கோபமடைந்த திருப்பூர் பள்ளி மாணவிகள் 50-க்கும் மேற்பட்டோர் 15 கி.மீ. பேருந்தில் சென்று பல்லடம் ஒன்றிய அரசுப் பள்ளி மாணவிகளுடன் சாலையிலேயே வாக்குவாதம் செய்து கைகலப்பில் ஈடுபட்டு தாக்கிக் கொண்டுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றத்தில் இருந்து தச்சூருக்குச் சென்ற பேருந்தில், காலை நேரத்திலேயே அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களும், மாணவிகளும் கல்வி ஆண்டின் கடைசி நாளைக் கொண்டாடுவதற்காக பொதுமக்கள் பலரும் இருந்த நிலையில் மது அருந்தினர். பெற்றோர், ஆசிரியர்கள், சமூகத்தினர் என யார் குறித்தும் கொஞ்சமும் அச்சமோ, கூச்சமோ இல்லாமல் அதைக் கைப்பேசியில் படம்பிடித்து சமூக ஊடகங்களில் பதிவும் செய்தனர்.

இதுபோன்றே, காஞ்சிபுரம் மாவட்டம், ஏனாத்தூரில் உள்ள தனியார் கலை-அறிவியல் கல்லூரியில் வகுப்பறையில் அமர்ந்தபடி பத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் கூட்டமாக அமர்ந்து மது அருந்தினர். இந்தச் சம்பவங்களும் சமூக வலைதளங்களில் பேசுபொருளாயின.

பல்வேறு எண்ணங்களைச் சுமந்துகொண்டு, பரபரப்பான காலை வேளையில் பொதுமக்கள் வேலைக்கும் மாணவர்கள் பள்ளிக்கும் செல்லும் நேரத்தில் பேருந்துகளிலும் ரயில்களிலும் தொங்கிக் கொண்டும், பேருந்துகளின் கூரையில் ஏறியும் மாணவர்கள் சிலர் செய்யும் அடாவடிகள் முகம் சுழிக்க வைப்பதுடன் பெண் பயணிகளுக்குப் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்துவதாக அமைகின்றன.

கணிதமேதை ராமானுஜன், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர் சி.வி.ராமன் உள்ளிட்ட பலர் படித்த சென்னை பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, நந்தனம் கல்லூரி போன்ற கல்லூரிகளின் மாணவர்கள் அடிக்கடி மோதலில் ஈடுபடுவது நெடுநாள்களாகவே தொடர்கிறது. இதுபோன்ற மோதல்கள் சில நிகழ்வுகளில் கொலை வரை சென்று விடுகிறது. சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களால் கடந்த ஆண்டு அக். 4-ஆம் தேதி கொடூரமாகத் தாக்கப்பட்ட மாநிலக் கல்லூரி மாணவர் சில நாள்களுக்குப் பின்னர் உயிரிழந்தார்.

இது தொடர்பான வழக்கின்போது, கடந்த 10 ஆண்டுகளில் இரு கல்லூரிகளைச் சேர்ந்த 231 மாணவர்கள் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் அறிக்கை தாக்கல் செய்தனர். கல்லூரி மாணவர்கள் மோதலில்






ஈடுபடுவதைத் தடுக்க மனநல நிபுணர்கள், கல்வியாளர்கள், அறிஞர்கள், கல்வித் துறை உயரதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அப்போது அறிவுறுத்தியது.

பாளையங்கோட்டையில் உள்ள தனியார் மெட்ரிக். பள்ளியில் 8-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இடையே கடந்த ஏப்ரலில் தகராறு ஏற்பட்டுள்ளது. ஒரு மாணவர் புத்தகப் பையில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து வகுப்பறையிலேயே மற்றொரு மாணவரை வெட்டியுள்ளார். தடுக்க வந்த ஆசிரியையையும் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்று காவல் நிலையத்தில் சரணடைந்தார் என்பது வியப்பளித்த நிகழ்வாகும்.

தெலுங்கில் இரண்டு பாகங்களாக வெளிவந்து சில ஆயிரம் கோடிகளைக் குவித்த திரைப்படத்தின் தாக்கம் குறித்து தெலங்கானா மாநிலம், ஹைதராபாத் அருகே உள்ள யூசுப்குடாவில் உள்ள அரசுப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியை ஒருவர் பேசியது சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

"திரைப்படம் பார்க்கும் மாணவர்கள், அந்த கதாநாயகன் போன்று ஆக நினைக்கிறார்கள். மாணவர்கள் கண்டபடி "ஹேர் ஸ்டைல்' (சிகை அலங்காரம்) வைத்து பள்ளிக்கு வருகின்றனர். எங்களால் அவர்களைத் தண்டிக்கக்கூட முடியாது. நல்லது என நினைத்து தண்டித்தால் மாணவர்கள் தற்கொலை வரை போகும் நிலை உள்ளது. இதற்கு சமூக வலைதளங்களும் ஒரு காரணம். மாணவர்கள் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்தால் ஒரு குருவாக நான் தோற்றுவிட்டதாகவே தோன்றுகிறது' என்று தேசிய கல்வி ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தனது உள்ளக்குமுறலைக் கொட்டினார் அவர்.

புகைப் பிடித்தல், மது அருந்துதல், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், பள்ளிப் பருவத்திலேயே காதலித்தல், பேருந்து, ரயில்களில் அட்டூழியம் செய்தல், ஜாதி ரீதியாகப் பகை வளர்த்தல் போன்றவை விதிவிலக்குகள் என்று சமாதானம் கூறிக் கடந்து செல்லாமல், பெற்றோர்களும் ஆசிரியர்களும் இதில் கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயம்.

கற்பித்தல் தவிர மற்ற பணிகளிலும் ஈடுபடுத்தப்படுவதால் கடும் பணிச் சுமை ஏற்படுகிறது என்பது ஆசிரியர்களின் குற்றச்சாட்டாக உள்ளது. மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

மதிப்பெண்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அதே அளவில் நன்னெறி வகுப்புகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்த நிலைமை இப்படியே தொடர்வதை சமுதாயம் அனுமதித்தால், தமிழர்கள் நாம் என்று தலைநிமிர்ந்து சொல்லிக்கொள்ள முடியாது!




# தமிழ் கடவுளுக்கு தமிழில் கும்பாபிஷேகம்

தமிழ் கடவுளான முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடாகவும், கடற்கரையோரம் அமைந்துள்ள கோவில்களில் மிகவும் சிறப்பு பெற்ற தலமாகவும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் விளங்குகிறது.

இந்த கோவிலில் கடந்த 2009-ஆம் ஆண்டு கும்பாபிஷேக விழா நடந்தது. அதன் பிறகு கும்பாபிஷேக விழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வந்தது.

இதற்கிடையே, திருச்செந்தூர் கோவிலை திருப்பதிக்கு இணையாக மாற்றும் வகையில், கடந்த 2022-ம் ஆண்டு ரூ.300 கோடி மதிப்பில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பெருந் திட்டவளாகப் பணிகள் தொடங்கியது. இதில் பல்வேறு திட்டப்பணிகள் முடிவுற்றதைத்தொடர்ந்து கும்பாபிஷேக விழா நடத்து வதற்கான ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டது. அதன்படி சுமார் 15 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு ஜூலை 7-ந்தேதி(இன்று) கும்பாபிஷேக விழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் விரைந்து நடந்தது.

இதைத்தொடர்ந்து கோவிலின் மேற்கு கோபு ரத்தின் அருகே கடந்த 40 நாட்களுக்கு முன்பு யாக சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கியது. சுமார் 8 ஆயிரம் சதுர அடி யில் பிரம்மாண்ட யாக சாலை பக்தர்களை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டது.

அங்கு கடந்த 1-ந் தேதி முதல் யாக சாலை பூஜைகள் தொடங்கி நடைபெற்றது. சுவாமி சண்முகருக்கு ராஜகோபுர வாசல் அருகே 8 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் பிரமாண்ட யாகசாலை அமைக்கப்பட்டு சுவாமி சண்முகருக்கு 49, ஜெயந்திநாதர் 5, நடராஜர் 5, பெருமாள் 5 மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு 12 என மொத்தம் 76 குண்டங்களில் சுமார் 400 கும்பங்கள் வைக்கப்பட்டு காலை, மாலை என ஒவ்வொரு யாகசாலை பூஜைகள் நடைபெற்று வந்தன.

06.07.2025 ஆன்று காலை 10-ம் கால யாகசாலை பூஜை, மாலையில் 11-ம் கால யாகசாலை பூஜை மற்றும் மகாதீபாராதனை நடந்தது. 07.07.2025 ஆன்று அதிகாலை 12-ம் கால யாகசாலை பூஜை நடைபெற்றது. விழாவின் சிகர நிகழ்ச்சியான மகா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெற்றது.

அதிகாலை 4 மணி அளவில் 12-ம் கால யாகசாலை பூஜைகள் நடந்தது. அதைத் தொடர்ந்து தீபாராதனையும் பூர்ணாகுதியும் நடந்தது. அதைத்



தொடர்ந்து பக்தர்களின் அரோகரா கோஷம் முழங்க கடம் புறப்பாடு தொடங்கியது. இதில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மீன்வளம் , மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கோவிலை சுற்றி வந்த கடத்திற்கு பின்னால் மேளதாளங்கள் முழங்க பக்தர்கள் கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா என கோஷ மிட்டபடி பின்தொடர்ந்து வந்தனர்.

தொடர்ந்து ராஜகோ புரத்திற்கு புனித நீர் ஊற்றப்படும் கடம் கோவிலின் மேற்கு வாசல் வழியாக அமைக்கப்பட்ட தற்காலிக பாதை மூலம் ராஜகோபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அமைக்கப்பட்டுள்ள 9 கலசங்களுக்கும் சிறப்பு பூஜைகள் நடந்தது.

தொடர்ந்து காலை 6.22 மணிக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பச்சை கொடி காட்டவும் 9 கலசங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடந்தது. அதைத் தொடர்ந்து கலசங்களுக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

அதே நேரத்தில் மூலவர், சண்முகம், வள்ளி, தெய்வானை, பெருமாள், நடராஜர் உள்பட பரிவார மூர்த்திகள் சன்னதிகளில் உள்ள கலசங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது.

விழாவில் தமிழில் மந்திரங்கள் ஓதப்பட்டது.

அப்போது பக்தர்கள் கந்தனுக்கு அரோகரா, கடம்பனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா வேலனுக்கு அரோகரா என கோஷமிட்டது விண்ணை பிளக்கும் அளவிற்கு இருந்தது.

கும்பாபிஷேக விழாவில் அமைச்சர்கள் சேகர்பாபு, அனிதா ராதாகிருஷ்ணன், முன்னாள் மத்திய மந்திரி பொன் ராதாகிருஷ்ணன், கோவில் தக்கார் அருள் முருகன், சிருங்கேரி சாரதா பீடாதிபதி விதுசேகர பாரதி சுவாமிகள், காஞ்சி காமகோடி பீடம் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், திருவாவடு துறை ஆதீன குரு மகா சன்னிதானம், தருமை ஆதீனம் குரு மகா சன்னிதானம், வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், ஜப்பான் நாட்டை சேர்ந்த பாலகும்பா குருமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கும்பாபிஷேக விழா நிறைவடைந்ததும் பக்தர்கள் இருந்த கடற்கரை பகுதியில் 20 ராட்சத டிரோன்கள் மூலம் பக்தர்கள் மேல் புனித நீர் தெளிக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் தலா 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒவ்வொரு டிரோன் மூலம் 3முறை பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

15 ஆண்டுகளுக்கு பிறகு நடந்த கும்பாபிஷேக விழா வில் லட்சக்கணக்கான பக்தர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு கண்குளிர பார்த்து மகிழ்ந்தனர்.



# இளம் சமூகம் எங்கே செல்கிறது? ஒழுங்குபடுத்துவது யார்?

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றத்தில் இருந்து தச்சூருக்குச் சென்ற பேருந்தில், காலை நேரத்திலேயே அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களும், மாணவிகளும் கல்வி ஆண்டின் கடைசி நாளைக் கொண்டாடுவதற்காக பொதுமக்கள் பலரும் இருந்த நிலையில் மது அருந்தினர். பெற்றோர், ஆசிரியர்கள், சமூகத்தினர் என யார் குறித்தும் கொஞ்சமும் அச்சமோ, கூச்சமோ இல்லாமல் அதைக் கைப்பேசியில் படம்பிடித்து சமூக ஊடகங்களில் பதிவும் செய்தனர்.

இதுபோன்றே, காஞ்சிபுரம் மாவட்டம், ஏனாத்தூரில் உள்ள தனியார் கலை-அறிவியல் கல்லூரியில் வகுப்பறையில் அமர்ந்தபடி பத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் கூட்டமாக அமர்ந்து மது அருந்தினர். இந்தச் சம்பவங்களும் சமூக வலைதளங்களில் பேசுபொருளாயின.

பல்வேறு எண்ணங்களைச் சுமந்துகொண்டு, பரபரப்பான காலை வேளையில் பொதுமக்கள் வேலைக்கும் மாணவர்கள் பள்ளிக்கும் செல்லும் நேரத்தில் பேருந்துகளிலும் ரயில்களிலும் தொங்கிக் கொண்டும், பேருந்துகளின் கூரையில் ஏறியும் மாணவர்கள் சிலர் செய்யும் அடாவடிகள் முகம் சுழிக்க வைப்பதுடன் பெண் பயணிகளுக்குப் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்துவதாக அமைகின்றன.


இதேபோன்று திருப்பூரில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் சில மாணவிகள் ஒன்றுசேர்ந்து இன்ஸ்டாகிராமில் குழு தொடங்கி தாங்கள்தான் “கெத்து’ என்ற ரீதியில் பதிவிட்டு வந்துள்ளனர். திருப்பூரில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள பல்லடம் ஒன்றியத்தில் உள்ள அரசுப் பள்ளி மாணவிகளும் இதுபோன்ற குழு அமைத்து இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு வந்ததில் போட்டி ஏற்பட்டுள்ளது.

இதனால் கோபமடைந்த திருப்பூர் பள்ளி மாணவிகள் 50-க்கும் மேற்பட்டோர் 15 கி.மீ. பேருந்தில் சென்று பல்லடம் ஒன்றிய அரசுப் பள்ளி மாணவிகளுடன் சாலையிலேயே வாக்குவாதம் செய்து கைகலப்பில் ஈடுபட்டு தாக்கிக் கொண்டுள்ளனர்.

கணிதமேதை ராமானுஜன், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர் சி.வி.ராமன் உள்ளிட்ட பலர் படித்த சென்னை பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, நந்தனம் கல்லூரி போன்ற கல்லூரிகளின் மாணவர்கள் அடிக்கடி மோதலில் ஈடுபடுவது நெடுநாள்களாகவே தொடர்கிறது. இதுபோன்ற

**பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் யார் அதிகம் பதிவு போடுவது என்ற போட்டியில் பள்ளி மாணவிகள் கைகலப்பில் ஈடுபட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ள.**

மோதல்கள் சில நிகழ்வுகளில் கொலை வரை சென்று விடுகிறது. சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களால் கடந்த ஆண்டு அக். 4-ஆம் தேதி கொடூரமாகத் தாக்கப்பட்ட மாநிலக் கல்லூரி மாணவர் சில நாள்களுக்குப் பின்னர் உயிரிழந்தார்.






இது தொடர்பான வழக்கின்போது, கடந்த 10 ஆண்டுகளில் இரு கல்லூரிகளைச் சேர்ந்த 231 மாணவர்கள் மீது குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் அறிக்கை தாக்கல் செய்தனர். கல்லூரி மாணவர்கள் மோதலில் ஈடுபடுவதைத் தடுக்க மனநல நிபுணர்கள், கல்வியாளர்கள், அறிஞர்கள், கல்வித் துறை உயரதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழுவை அமைக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் அப்போது அறிவுறுத்தியது.

பாளையங்கோட்டையில் உள்ள தனியார் மெட்ரிக். பள்ளியில் 8-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இடையே கடந்த ஏப்ரலில் தகராறு ஏற்பட்டுள்ளது. ஒரு மாணவர் புத்தகப் பையில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து வகுப்பறையிலேயே மற்றொரு மாணவரை வெட்டியுள்ளார். தடுக்க வந்த ஆசிரியையையும் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்று காவல் நிலையத்தில் சரணடைந்தார் என்பது வியப்பளித்த நிகழ்வாகும்.

தெலுங்கில் இரண்டு பாகங்களாக வெளிவந்து சில ஆயிரம் கோடிகளைக் குவித்த திரைப்படத்தின் தாக்கம் குறித்து தெலங்கானா மாநிலம், ஹைதராபாத் அருகே உள்ள யூசுப்குடாவில் உள்ள அரசுப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியை ஒருவர் பேசியது சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

“திரைப்படம் பார்க்கும் மாணவர்கள், அந்த கதாநாயகன் போன்று ஆக நினைக்கிறார்கள். மாணவர்கள் கண்டபடி “ஹேர் ஸ்டைல்’ (சிகை அலங்காரம்) வைத்து பள்ளிக்கு வருகின்றனர். எங்களால் அவர்களைத் தண்டிக்கக்கூட முடியாது. நல்லது என நினைத்து தண்டித்தால் மாணவர்கள் தற்கொலை வரை போகும் நிலை உள்ளது. இதற்கு சமூக வலைதளங்களும் ஒரு காரணம். மாணவர்கள் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்தால் ஒரு குருவாக நான் தோற்றுவிட்டதாகவே தோன்றுகிறது’ என்று தேசிய கல்வி ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தனது உள்ளக்குமுறலைக் கொட்டினார் அவர்.

புகைப் பிடித்தல், மது அருந்துதல், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், பள்ளிப் பருவத்திலேயே காதலித்தல், பேருந்து, ரயில்களில் அட்டூழியம் செய்தல், ஜாதி ரீதியாகப் பகை வளர்த்தல் போன்றவை விதிவிலக்குகள் என்று சமாதானம் கூறிக் கடந்து செல்லாமல், பெற்றோர்களும் ஆசிரியர்களும் இதில் கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயம்.

கற்பித்தல் தவிர மற்ற பணிகளிலும் ஈடுபடுத்தப்படுவதால் கடும் பணிச் சுமை ஏற்படுகிறது என்பது ஆசிரியர்களின் குற்றச்சாட்டாக உள்ளது. மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

மதிப்பெண்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அதே அளவில் நன்னெறி வகுப்புகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்த நிலைமை இப்படியே தொடர்வதை சமுதாயம் அனுமதித்தால், தமிழர்கள் நாம் என்று தலைநிமிர்ந்து சொல்லிக்கொள்ள முடியாது!



# மருத்துவ கழிவுகளை கொட்டினால் குண்டர் சட்டம்!

# அதிகாரிகள் நடைமுறைப்படுத்துவார்களா?

சுத்தம் சுகம் தரும் என்ற நெறிமுறையை அடிப்படையாகக்கொண்டு, தமிழக அரசு அனைத்து இடங்களையும் சுத்தமாகவும் குப்பையில்லாமல் பராமரிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழக அரசு தூய்மை இயக்கம் என்ற சிறப்பு முன்னெடுப்புகளையும் எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கைகளில் அனைத்து பகுதிகளிலும் உள்ள மருத்துவ கழிவுகளை பிரித்தெடுத்து அழிப்பது மிகவும் முக்கியமானதாகும். தங்களுக்குள்ள நோய்கள் குணமாக மக்கள் மருத்துவமனைகளுக்கு செல்கிறார்கள். அங்கு சிகிச்சை அளிக்கும்போது பல கழிவுகள் குறிப்பாக ரத்த கழிவுகள் உருவாகின்றன. இந்த கழிவுகளை முறையாக அழிக்காமல் கண்ட இடங்களில் போட்டு குவித்தால் அதனால் மேலும் பல நோய்கள் புதிதாக ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் மருத்துவமனைகளில் சேரும் கழிவுகளை அழிக்க தமிழக அரசு ஒரு சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ கழிவுகளை தினமும் சேகரித்து நவீன எந்திரங்கள் மூலம் அழித்தும், மறுசுழற்சி செய்தும் வருகின்றன. ஆனால் அண்டை மாநிலமான கேரளாவில் பல மருத்துவமனைகளில் சேரும் கழிவுகளை அழிக்காமல் தமிழ்நாட்டில் கேரள எல்லைப் புறங்களில் வந்து கொட்டிவிட்டு சென்று விடுகின்றனர். கோவை உள்ளிட்ட எல்லை மாவட்டங்களில், லாரிகளில் மருத்துவ கழிவுகளை கொண்டுவந்து கொட்டிவிட்டு தப்பிவிடுகின்றனர். குறிப்பாக நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, கோவை மாவட்டங்களில் உள்ள எல்லைப் பகுதிகளில் லாரிகளில் மருத்துவ கழிவுகளை கொண்டுவந்து கொட்டிவிட்டு ஓடிவிடுகிறார்கள். பல நேரங்களில் உஷாரான மக்கள் அந்த லாரிகளைப்பிடித்து மீண்டும் கழிவுகளை ஏற்ற சொல்லி கேரளாவுக்கே திருப்பி அனுப்பிவிடுகின்றனர்.

இதுபோல தமிழ்நாட்டிலும் உள்ள சில மருத்துவமனைகள் மருத்துவ கழிவுகளை பொதுவான குப்பை கிடங்குகளிலும், ஊருக்கு வெளியே உள்ள பொதுஇடங்களிலும் கொட்டிவிடுகிறார்கள். இதனால் மக்கள் பல்வேறு நோய்களுக்குள்ளாகின்றனர். காற்று

மாசுபடும் நிலையில், நோய் தொற்றுகளும் பரவுகின்றன. மேலும், நிலத்தடிநீரும் பாதிக்கப்படுகிறது. இதை தடுக்க தமிழக அரசு உயிரி மருத்துவ கழிவுகளை குவிக்கும் குற்றவாளிகளை குண்டர் சட்டத்தில் கைதுசெய்து சிறையில் அடைக்கும் வகையில் ஒரு சட்டத்தை சட்டசபையில் நிறைவேற்றியுள்ளது. இதுமட்டுமல்லாமல் அந்த குற்றத்தை செய்தவர்கள் தலைமறைவாக இருந்தால் அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யவும் அந்த சட்டத்தில் இடம் இருக்கிறது. இவ்வாறு மருத்துவ கழிவுகளை கொட்டுபவர்களை கள்ளச்சாராய குற்றவாளிகளுக்கு இணையாக தண்டிக்க இந்த சட்டம் வழிசெய்கிறது.

**தமிழக அரசு உயிரி மருத்துவ கழிவுகளை குவிக்கும் குற்றவாளிகளை குண்டர் சட்டத்தில் கைதுசெய்து சிறையில் அடைக்கும் சட்டத்தை சட்டசபையில் நிறைவேற்றியுள்ளது, மேலும் குற்றவாளி தலைமறைவாக இருந்தால் அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யவும், மேலும் கள்ளச்சாராய குற்றவாளிகளுக்கு இணையாக தண்டிக்கவும் இந்த சட்டம் வழிசெய்கிறது.**

கடந்த சட்டசபை கூட்டத்தொடரில் அதாவது, கடந்த ஏப்ரல் 26-ந்தேதி தாக்கல் செய்யப்பட்டு 30-ந்தேதி நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு கவர்னர் எந்தவித தாமதமும் செய்யாமல் கடந்த ஜூன் 13-ந்தேதி ஒப்புதல் கொடுத்துவிட்டார். இந்த மசோதா கவர்னர் ஒப்புதல் கொடுத்தவுடன் சட்டமாகி அமலுக்கு வந்துவிட்டது. ஆனால், அதை முறையாக நடைமுறைப்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும். மருத்துவமனை உரிமையாளர்களும் இந்தச் சட்டத்தின்கீழ் குற்றவாளிகளாகக் கருதப்படலாம் என்பதால் அவர்களுக்கும் இனி பயத்தை கொடுக்கும். சட்டம் கொண்டு வருவதோடு நிறுத்தி விடாமல் மருத்துவ கழிவுகளை மருத்துவமனைகள் எவ்வாறு கையாளுகிறது என்பதை அடிக்கடி சோதனை செய்து பார்க்க வேண்டும். மேலும் அவற்றை அழிப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றச் செய்யவேண்டும். அதற்கான மேலும் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டுக்குள் வரும் வாகனங்களையும் எல்லைப் பகுதிகளையும் தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: info@penakural.com, Web: www.penakural.com

UPI Number:
8754582123

# இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையையும் - உற்பத்தியும்



## உண்மை நிலை என்ன?

ஈரானின் அணுசக்தி தளங்கள் மீதான அமெரிக்காவின் தாக்குதலைத் தொடர்ந்து, கச்சா எண்ணெயின் விலை பீப்பாய் 81 டாலரை தொட்டது. ஈரான்- இஸ்ரேல் போர் நிறுத்தத்துக்குப் பிறகு 67 டாலராக குறைந்து, ஓரளவுக்கு சமநிலைப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை அப்படியே தொடரக்கூடும் என்பதுதான் எதிர்பார்ப்பு.

இத்தனைக்கும் 'ஒபெக்' நாடுகளிடம் போதிய கையிருப்பு இருக்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டும். 'தனது உற்பத்தியும், கையிருப்பும் போதிய அளவில் இருக்க வேண்டும் என்று அமெரிக்காவே எச்சரிக்கையாக இருக்கும் நிலையில், தனது தேவையில் 88 % கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் இந்தியாவின் நிலைமை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 2012 நிதியாண்டிலிருந்து இந்தியாவின் உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தி தொடர்ந்து குறைந்து வருவதால், நாம் மிகவும் எச்சரிக்கையாக இருந்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.


இந்தியாவில் கச்சா எண்ணெய் வயல்கள் ஆய்வும், உற்பத்தியும் குறைந்து வருவதற்குப் பல காரணிகள் இருக்கின்றன. புதிய கச்சா எண்ணெய் வயல்களை அடையாளம் கண்டு, ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து உற்பத்தி செய்வது எளிதானது அல்ல. ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு அதிக அளவில் மூலதனம் தேவைப்படும். பழைய எண்ணெய் வயல்களிலும், சுமாரான அளவில் மட்டுமே எண்ணெய் வளம் கொண்ட இடங்களிலும் நிலத்தடி கச்சா எண்ணெயின் இருப்பும் குறைந்து வருகிறது.

இப்போதுதான் 13 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்திய அரசு விழித்துக் கொண்டு புதிய ஹைட்ரோ கார்பன் வயல்களின் கண்டுபிடிப்பு அறவே இல்லாமல் இருப்பதை உணர்ந்திருக்கிறது. ஆழ்கடல் கச்சா எண்ணெய் ஆய்வுக்கான தொழில்நுட்பத்திலும் நாம் மிகவும் பின்தங்கி இருக்கிறோம் என்பதும் காலம் கடந்து புரிந்திருக்கிறது.

உள்நாட்டு, பன்னாட்டுக் கச்சா எண்ணெய் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலமும் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமும்தான், இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையையும், உற்பத்தியையும் எட்ட முடியும் என்கிற உண்மையைப் புரிந்து கொள்ள இத்தனை ஆண்டுகளாகி இருக்கின்றன. அதன் விளைவுதான், 2025 எண்ணெய் வயல்கள் (வரைமுறைப்படுத்துதல்,

மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம்.

2030-க்குள் 10 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் கச்சா எண்ணெய் இருப்பு குறித்த ஆய்வுகளை நடத்த திட்டமிட்டிருப்பதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்திருக்கிறார். அதற்கு, தடை செய்யப்பட்ட பகுதிகளிலும் ஹைட்ரோ கார்பன் இருப்புக் குறித்த ஆய்வுகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டால் தான் அமைச்சரின் எண்ணம் ஈடேறும். ஆய்வுக்கான விருப்ப மனுக்களில் 38 % தடை செய்யப்பட்ட பகுதிகளில்தான் அமைகின்றன.




ஒன்றிய அரசின் ஓஎன்ஜிசி எனப்படும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் கடந்த நிதியாண்டில் புதிதாக 578 ஆழ்துளை எண்ணெய் கிணறுகளை நிறுவி இருக்கிறது. கடந்த 35 ஆண்டுகளில் இதுதான் அதிக சாதனை. இவற்றில் 109 சோதனைக் கிணறுகள் என்றால் ஏனைய 469 ஆழ்துளைக் கிணறுகள் எண்ணெய் எடுப்பதற்கானவை. (இவற்றுக்கான மூலதனச் செலவு மட்டும் 7.2 பில்லியன் டாலர்).

'மும்பை ஹை' எனப்படும் மும்பையை ஒட்டிய அரபிக் கடல் பகுதிகளில் எண்ணெய் வயல்களைக் கண்டறியவும், உற்பத்தி செய்யவும் பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. தனியார் பன்னாட்டு நிறுவனமான 'கெய்ன் ஆயில் அண்ட் கேஸ்' இந்தியாவின் கச்சா எண்ணெய் உற்பத்தியை மூன்று மடங்கு அதிகரித்து மொத்த உற்பத்தியில் 50 சதவீதம் அளவை எட்டத் திட்டமிட்டிருக்கிறது. இதற்காக அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 400 கோடி டாலர் முதலீடு செய்ய இருக்கிறது.


ஏப்ரல் 2000 முதல் செப்டம்பர் 2024 வரையிலான 24 ஆண்டுகளில் கச்சா எண்ணெய் துறையில் இந்தியா ஈர்த்திருக்கும் மொத்த அந்நிய நேரடி முதலீடு வெறும் 8.2 பில்லியன் டாலர் மட்டுமே.

முதலீட்டு அளவிலும் எண்ணெய் வயல்களைக் கையகப்படுத்துவதில் சிக்கலும், அதிக இழப்பீட்டுத் தேவையும் உலகின் பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தியாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்யத் தடையாக இருக்கின்றன. ஹைட்ரோ கார்பன் உற்பத்திக்கான செலவு மிக அதிகம் என்பதால், ஏனைய தொழிற்சாலைகளைப் போல நிலத்துக்கான இழப்பீடு வழங்க முடிவதில்லை என்பது அவர்களது வாதம்.

வேளாண்மைக்கும், வசதியான வாழ்க்கைக்கும் எரிசக்தி தேவை என்றால், அதற்காக சில சமரசங்களுக்கும் நாம் தயாராக வேண்டும். இலவச மின்சாரம் வேண்டுமென்றால் அணு மின் நிலையங்களின் ஆபத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டும். தாராளமாக பெட்ரோல், டீசல் பயன்பாடு வேண்டுமென்றால் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்காக நமது விளைநிலங்களை பலி கொடுத்தாக வேண்டும்.

நம்மைப் பற்றி கவலைப்படப் போகிறோமா அல்லது நமது முன்னோர்களைப் போல, வருங்கால சந்ததியினரைப் பற்றி கவலைப்படப் போகிறோமா என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

# சைபர் கிரைம் (CYBER CRIME)




சைபர், நமது உலகத்தை தற்போது வரையறுக்கும் தவிர்க்க முடியாத முன்னொட்டு இது. மக்களின் தனியுரிமை முதல் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகள் வரை, 'சைபர்' என்ற சொல் தலைப்புச் செய்திகளிலும் விவாதங்களிலும் ஆதிக்கம் செலுத்துகிறது நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் அளவு காரணமாக நாம் முடங்கிப் போகும் அபாயம் உள்ளது. சைபர் பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்தின் எதிர்காலம் குறித்து இன்னும் பல கேள்விகள் இருந்தாலும், சைபர் குற்றத்தின் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதில் சர்வதேச ஒத்துழைப்பு முக்கிய அங்கமாகும் என்பதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சைபர் கிரைம் என்பது ஒரு கணினி, கணினி வலையமைப்பு அல்லது நெட்வொர்க் செய்யப்பட்ட சாதனத்தை குறிவைத்து அல்லது பயன்படுத்தும் குற்றச் செயலாகும். பெரும்பாலான சைபர் கிரைம் பணம் சம்பாதிக்க விரும்பும் சைபர் குற்றவாளிகள் அல்லது ஹேக்கர்களால் செய்யப்படுகிறது. இருப்பினும், எப்போதாவது சைபர் கிரைம் லாபம் அல்லாத காரணங்களுக்காக கணினிகள் அல்லது நெட்வொர்க்குகளை சேதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவை அரசியல் அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக இருக்கலாம்.

பெண்கள் மற்றும் சிறுவர்களை ஆன்லைன் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல்; சட்டவிரோத மருந்துகள் மற்றும் துப்பாக்கிகளை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் கருப்பு சைபர் சந்தைகள்; ரான்சம்வேர் தாக்குதல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை ஈர்க்க சமூக வலைப்பின்னல்களைப் பயன்படுத்தும் மனித கடத்தல்காரர்கள். சைபர் குற்றத்தின் முன்னோடியில்லாத நோக்கம் - நமது வீடுகள், பள்ளிகள், வணிகங்கள், மருத்துவமனைகள் மற்றும் பிற முக்கிய சேவை வழங்குநர்களில் எல்லைகளைக் கடப்பது அச்சுறுத்தல்களை அதிகரிக்கிறது.

சமீபத்திய ஆய்வு ஒன்று சைபர் குற்றத்தின் உலகளாவிய செலவை $600 பில்லியன் என மதிப்பிட்டுள்ளது. நிலையான வளர்ச்சி, பாதுகாப்பு, பாலின சமத்துவம் மற்றும் பாதுகாப்பிற்கு ஏற்படும் சேதம் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆன்லைன் பாலியல் துஷ்பிரயோகத்தால் விகிதாசாரமாக தடைபடுகிறார்கள் சைபர் கிரைம் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களால் மேற்கொள்ளப்படலாம். சில சைபர் கிரைமினல்கள் ஒழுங்கமைக்கப்பட்டவை, மேம்பட்ட நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன மற்றும் மிகவும் தொழில்நுட்ப ரீதியாக திறமையானவை. மற்றவர்கள் புதிய ஹேக்கர்கள்.

மக்களை ஆன்லைனில் மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பது ஒரு பெரிய பணியாகும், மேலும் எந்தவொரு நிறுவனத்திடமும் அல்லது அரசாங்கத்திடமும் சரியான தீர்வு இல்லை. இருப்பினும், சைபர் குற்றங்களைத் தடுப்பதற்கும், அவற்றுக்கான பதிலை மேம்படுத்துவதற்கும் நிறைய செய்ய முடியும், எடுத்துக்காட்டாக:

- சாத்தியமான சட்ட இடைவெளிகளை ஈடுகட்ட, குறிப்பாக வளரும் நாடுகளில், திறன்களை உருவாக்குதல்;
- அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும், மற்ற சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகளுக்கும், இன்டர்போல், வணிகம் மற்றும் சிவில் சமூகத்திற்கும் இடையிலான சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் உரையாடலை வலுப்படுத்துதல்.

சைபர் குற்றத்துடன் தொடர்புடைய குற்றங்கள், தீம்பொருள், ரான்சம்வேர் மற்றும் ஹேக்கிங் பரவுதல், நிதித் தரவு திருட்டுக்கான பிற திட்டங்களைப்




பயன்படுத்துதல், ஆன்லைன் குழந்தை பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் போன்றவை அனைத்தும் 'சைபர்' என்ற சொல்லுக்கு அப்பால் பொதுவான ஒன்றைக் கொண்டுள்ளன: அனைத்தும் குற்றங்கள்.

காவல்துறை, வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகள் இந்தக் குற்றங்களைப் புரிந்து கொள்ள வேண்டும், மேலும் குற்றவாளிகளை விசாரித்து வழக்குத் தொடரவும், பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவும் பொருத்தமான கருவிகளைக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் வழக்குகளைச் செயல்படுத்தவும் வழக்குத் தொடரவும் முடியும்.

**சைபர் குற்றங்களின் வகைகள் என்ன?**

சட்டப்பூர்வ சூழல்களில் சைபர் குற்றங்கள் என்று அழைக்கப்படும் சைபர் குற்றத்தில், பின்வருபவை போன்ற பல்வேறு வகையான தீங்கிழைக்கும் நடவடிக்கைகள் அடங்கும்:

1. மின்னஞ்சல் மற்றும் இணைய மோசடி.
2. அடையாள மோசடி பயன்படுத்தப்படும் இடம்). (தனிப்பட்ட தகவல்கள் திருடப்பட்டு
3. நிதி அல்லது அட்டை கட்டணத் தரவை அங்கீகரிக்கப்படாத முறையில் பெறுதல் உட்பட சைபர் திருட்டு.
4. பெருநிறுவனத் தரவைத் திருடுதல் மற்றும் விற்பனை செய்தல்.
5. சைபர் மிரட்டி பணம் பறித்தல் (அச்சுறுத்தப்பட்ட தாக்குதலைத் தடுக்க பணம் கோருதல்).
6. ரான்சம்வேர் தாக்குதல்கள் (ஒரு வகையான சைபர் மிரட்டி பணம் பறித்தல்).
7. கிரிப்டோஜேக்கிங் (ஹேக்கர்கள் தங்களுக்குச் சொந்தமில்லாத வளங்களைப் பயன்படுத்தி கிரிப்டோகரன்சியை சுரங்கப்படுத்துதல்).
8. சைபர் உளவு (ஹேக்கர்கள் அரசு அல்லது நிறுவனத் தரவை அணுகும் இடம்).
9. ஒரு நெட்வொர்க்கை சமரசம் செய்யும் வகையில் அமைப்புகளில் தலையிடுதல்.
10. பதிப்புரிமையை மீறுதல்.
11. சட்டவிரோத சூதாட்டம்.
12. சட்டவிரோத பொருட்களை ஆன்லைனில் விற்பனை செய்தல்.
13. குழந்தை ஆபாசத்தை கோருதல், தயாரித்தல் அல்லது வைத்திருத்தல்.

இவை மிகவும் பொதுவான சைபர் குற்றங்களில் சில, ஆனால் தொழில்நுட்பம் உருவாகும்போது புதிய அச்சுறுத்தல்கள் தொடர்ந்து வெளிப்படுகின்றன.

சைபர் கிரைம் என்பது பின்வருவனவற்றில் ஒன்று அல்லது இரண்டையும் உள்ளடக்கியது:

1. வைரஸ்கள் மற்றும் பிற வகையான தீம்பொருள்களைப் பயன்படுத்தி கணினிகளை குறிவைக்கும் குற்றச் செயல்.
2. பிற குற்றங்களைச் செய்ய கணினிகளைப் பயன்படுத்தும் குற்றச் செயல்.

கணினிகளை குறிவைக்கும் சைபர் குற்றவாளிகள், சாதனங்களை சேதப்படுத்த அல்லது அவற்றின் செயல்பாட்டை நிறுத்த தீம்பொருளால் அவற்றைப் பாதிக்கலாம். அவர்கள் தரவை நீக்க அல்லது திருட தீம்பொருளைப் பயன்படுத்தலாம். அல்லது சைபர் குற்றவாளிகள் பயனர்கள் ஒரு வலைத்தளம் அல்லது நெட்வொர்க்கைப் பயன்படுத்துவதைத் தடுக்கலாம் அல்லது அதன் வாடிக்கையாளர்களுக்கு மென்பொருள் சேவையை வழங்கும் வணிகத்தைத் தடுக்கலாம், இது சேவை மறுப்பு (ஈர்ந) தாக்குதல் என்று அழைக்கப்படுகிறது.

பிற குற்றங்களைச் செய்ய கணினிகளைப் பயன்படுத்தும் சைபர் கிரைம், தீம்பொருள், சட்டவிரோத தகவல்கள் அல்லது சட்டவிரோத படங்களைப் பரப்ப கணினிகள் அல்லது உள்ளடக்கியிருக்கலாம். நெட்வொர்க்குகளைப் பயன்படுத்துவதை

சைபர் குற்றவாளிகள் பெரும்பாலும் இரண்டையும் ஒரே நேரத்தில் செய்கிறார்கள். அவர்கள் முதலில் வைரஸ்கள் உள்ள கணினிகளை குறிவைத்து, பின்னர் அவற்றைப் பயன்படுத்தி தீம்பொருளை மற்ற இயந்திரங்களுக்கு அல்லது ஒரு நெட்வொர்க் முழுவதும் பரப்பலாம். சில அதிகார வரம்புகள் மூன்றாவது வகை சைபர் கிரைமை அங்கீகரிக்கின்றன, அங்கு ஒரு கணினி குற்றத்திற்கான துணைப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு திருடப்பட்ட தரவைச் சேமிக்க கணினியைப் பயன்படுத்துவது.

# கடல் கொள்ளையர்களால் ஆபத்தா?

தமிழ்நாட்டில் 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடல் பகுதி ஒருபக்கம் பெரிய, சிறிய துறைமுகங்களின் இருப்பிடமாக இருந்தாலும், மற்றொருபுறம் கடலோரங்களில் உள்ள மாவட்டங்களில் வாழும் மீனவர்களுக்கு வாழ்வாதாரமாகவும் இருக்கிறது. இந்த மீனவர்களுக்கு வேறு தொழில் தெரியாது, அதற்கான ஆதாரங்களும் அவர்கள் வாழும் கடலோர பகுதிகளில் இல்லை. மீன்பிடி தொழில் மீனவர்களின் பாரம்பரிய தொழிலாகும். சுட்டெரிக்கும் வெயில், கனமழை, ஆர்ப்பரித்து எழும் அலைகள், பெரும் புயல் என்று பல இயற்கை இடர்பாடுகளுக்கு இடையே தங்கள் தொழிலை செய்துவருகிறார்கள். கடலுக்குள் மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் திரும்பி வந்தால்தான் நிச்சயம் என்ற நிலையில், அவர்களின் குடும்பத்தினர் பத்திரமாக இல்லம் திரும்பும் வரை கடல் அன்னையை வழிபட்டுக்கொண்டு இருப்பார்கள்.

சுனாமியையே எதிர்கொண்ட தமிழக மீனவர்களுக்கு 2009-ம் ஆண்டு முதல் ஆபத்து தொடங்கியது. கடலில் மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது இலங்கை கடற்படையினர் மீனவர்களை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்துவதும், கைது செய்து படகுகள் மற்றும் உபகரணங்களை பறிமுதல் செய்வதும் தொடர் கதையாகிவிட்டது. முன்பு அவர்கள் கைது செய்யப்பட்டதும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதுவதும், அவர் ராஜ்ய உறவு மூலமாக அவர்களை விடுதலை செய்ய செய்வதும் வழக்கமாக இருந்தது. ஆனால் சமீபகாலங்களாக இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களை கைது செய்து சிறையில் அடைப்பதும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி லட்சக்கணக்கில் அபராதம் விதிப்பதும் புது கதையாகிவிட்டது. விடுதலை செய்யப்பட்ட பிறகும் மீனவர்களின் படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்கள் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை.

இதற்கிடையே இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், 229 மீன்பிடி படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மந்திரி ஜெய்சங்கருக்கு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த மாதம் 5-ந்தேதி கடிதம் எழுதியிருந்தார். இதுபோன்ற துயரத்தில் வாழ்க்கையை நடத்தும் மீனவர்களுக்கு, இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தலோடு புதிதாக



இலங்கையில் இருந்து வரும் கடல் கொள்ளையர்களாலும் ஆபத்து உருவாகியுள்ளது. ஆங்காங்கு சிறு, சிறு சம்பவங்களாக நடந்துவந்தது இப்போது பூதாகரமாக அடிக்கடி நடக்கத்தொடங்கிவிட்டது. கடந்த மே மாதம் மீன்பிடிக்க சென்ற நாகப்பட்டினம் மீனவர்கள் 24 பேரை வெவ்வேறு சம்பவங்களில் இலங்கையில் இருந்து வந்த கடல் கொள்ளையர்கள் நடுக்கடலில் இடைமறித்து தாக்குதல் நடத்தியதோடு, அவர்களிடம் இருந்த பொருட்களையும் கொள்ளையடித்து சென்றனர்.

இதேபோல வெவ்வேறு சம்பவங்களில் கடந்த மாதம் 26-ந்தேதி கோடியக்கரை அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள செருதூர் பி.எஸ்.என்.எல். சுனாமி குடியிருப்பை சேர்ந்த 9 மீனவர்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்கி அவர்களிடம் இருந்த மீன்பிடி வலை, பேட்டரி, ஜி.பி.எஸ். கேப், செல்போன், லைட் உள்பட ரூ.7 லட்சம் மதிப்பிலான மீன்பிடி உபகரணங்களை பறித்து சென்றுள்ளனர். இதில் காயமடைந்த மீனவர்கள் 4 பேர் நாகப்பட்டினம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். இனி கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு பாதுகாப்பு இந்திய கடற்படையும், கடலோர காவல் படையும்தான். அவர்கள்தான் பாதுகாப்பு அரணாக இருக்கவேண்டும். தமிழ்நாட்டுக்கும், இலங்கைக்கும் இடையே உள்ள இடங்களில் இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல் படையின் கப்பல்கள் தீவிர ரோந்து வந்தால் இலங்கை கடற்படையினரோ குறிப்பாக இலங்கை கடல் கொள்ளையர்களோ அவர்களை நெருங்கமாட்டார்கள். இலங்கை கடற்படையினரிடமும் கடல் கொள்ளையர்களின் நடமாட்டத்தை ஒழிக்க மத்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்.



TAMILNI
PRINTZ & GRAPHICS
ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS
DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION
DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER
WEBSITE
DESIGN
SERVICE
APPLY
PAN CARD
PASSPORT
ALL
ONLINE
SERVICE
DESIGN
MAGAZINE
NEWSPAPER
NEWS
ADDRESS:
3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097, EMAIL: rsprintzy@gmail.com
PH.: 044-3590 6002 MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - July 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**

